தினபூமி
thinaboomi.com
பூமி: 33 சுற்று: 354 ஐப்பசி 16
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, ஞாயிறு, நவம்பர் 02, 2025 ▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி பக்கம் 8 ₹3.00



**பாலியல் புகாரில் சிக்கிய இங்கிலாந்து இளவரசர் ஆண்ட்ரூவின் பட்டங்கள், சலுகைகளை பறித்தார் மன்னர் சார்லஸ்**
....2-ம் பக்கம்

**மாநிலங்களின் வளர்ச்சியில்தான் இந்தியாவின் வளர்ச்சி உள்ளது: சத்தீஸ்கரில் பிரதமர் மோடி பேச்சு**
...3-ம் பக்கம்

**13-வது மகளிர் உலகக் கோப்பை: இந்தியா - தெ.ஆப்பிரிக்கா அணிகள் இன்று இறுதி போட்டியில் மோதல்**
....6-ம் பக்கம்





● சென்னை தலைமைச்செயலகத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஈரோடு, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருநெல்வேலி, அரியலூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் ரூ.1,177 கோடியே 15 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலைப்பணிகள், வேலூரில் ரூ.71 கோடியே 9 லட்சம் செலவில் ரயில்வே கடவுகளுக்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள 2 சாலை மேம்பாலங்கள் ஆகியவற்றை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் குறித்து ஆலோசனை:

# முதல்வர் ஸ்டாலின் தலைமையில் இன்று அனைத்துக்கட்சி கூட்டம்

## த.வெ.க. உள்ளிட்ட 60 கட்சிகளுக்கு தி.மு.க. அழைப்பு

சென்னை, நவ. 02-

**வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் இன்று அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க தி.மு.க. சார்பில் த.வெ.க. உள்ளிட்ட 60 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்கு மட்டுமன்றி கூட்டணியில் இல்லாத கட்சி தலைவர்களையும் அழைக்கும்படி தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**

**வரும் 4-ம் தேதி முதல்**

சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கு எதிரான அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்க 60 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நவம்பர் 4-ம் தேதி முதல் தீவிர வாக்காளர் பட்டியல் சீர் திருத்தம் பணிகள் தொடங்க உள்ளன. இதற்கு தி.மு.க., காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஆனால், அ.தி.மு.க., பாஜக உள்பட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் வரவேற்பு தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், இன்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**நட்சத்திர ஓட்டலில்...**

சென்னை தி.நகரில் உள்ள அக்கார்டு நட்சத்திர ஓட்டலில் இந்த கூட்டம் நடைபெறுகிறது. இதில் பங்கேற்குமாறு தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்கு மட்டுமன்றி கூட்டணியில் இல்லாத கட்சி தலைவர்களையும் அழைக்கும்படி தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி தி.மு.க. தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன், துறைமுகம் காஜா, ஆஸ்டின் ஆகியோர் ஒவ்வொரு கட்சி தலைவர்களின் அலுவலகங்களுக்கு சென்று அழைப்பு கடிதம் கொடுத்தார். அந்த வகையில் த.வெ.க. கட்சி பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்தை பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் பூச்சி முருகன் சந்தித்து அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு கடிதத்தை வழங்கினார்.

**த.மா.கா. - இ.கம்யூ.....**

அதே போல் மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன், த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன், தே.மு.தி.க.தலைவர் பிரேமலதா விஜயகாந்த், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் முக்குலத்தோர் புலிப்படைத் தலைவர் கருணாஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உள்ளிட்ட கட்சி அலுவலகங்களுக்கு சென்று பூச்சி முருகன் அழைப்பு கடிதம் வழங்கி உள்ளார்.

**அழைப்பு கடிதங்கள்...**

மற்றொரு தி.மு.க. தலைமை நிலையச்செயலாளரான துறைமுகம் காஜா, தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, கொங்குநாடு மக்கள் தேசிய. கட்சித் தலைவர் ஈசுவரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட தலை வர்களின் கட்சி அலுவலகங்களுக்கு சென்று அழைப்பு கடிதங்களை வழங்கினார்.

**60 கட்சி தலைவர்கள்**

மேலும் இன்னொரு தலைமை நிலையச் செயலாளரான ஆஸ்டினும் அழைப்பு கடிதங்களை வழங்கினார். பா.ம.க. நிறுவனர் டாக் டர் ராமதாஸ், அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி. டி.வி.தினகரன், அ.தி.மு.க. தொண்டர் உரிமை மீட்புக்குழு தலைவர் ஓ.பன்னீர் செல்வம், பொன்குமார், பஷீர் அகமது உள்ளிட்ட 60 கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

**3 பேருக்கு மட்டும்...**

அதி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகிய 3 பேர்களுக்கு மட்டும் கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தி.மு.க. தலைமை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

### மதுரை, தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களில்

# ரூ.1248.24 கோடி செலவில் சாலைகள், மேம்பாலங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, நவ. 02-

**நெடுஞ்சாலைத் துறை சார்பில் மதுரை, தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களில் ரூ.1248.24 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 சாலைகள் மற்றும் 2 சாலை மேம்பாலங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.**

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (1.11.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஈரோடு, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருநெல்வேலி, அரியலூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 1,177 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலைப்பணிகள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 71 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில் ரெயில்வே கடவுகளுக்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள இரண்டு சாலை மேம்பாலங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலை துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் 272 கோடியே 53 லட்சம் ரூபாய் செலவில் (மாநில நெடுஞ்சாலை எண் 15) (கி.மீ 123-153/6) 30.60 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தப்பட்ட கோபி - ஈரோடு சாலை, மயிலாடுதுறை, திருவாரூர் மாவட்டங்களில் 221 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் 10 மீ அகல இருவழிச்சாலையாக (மாநில நெடுஞ்சாலை 23-1) (கி.மீ 4/5-20/925) 16.425 கி.மீ நீளத்திற்கு

(கடைசி பக்கம் பார்க்க)

### அதிநவீன சி.எம்.எஸ்.-03 செயற்கைக்கோளுடன்

# எல்.வி.எம்.-3 எம்-5 ராக்கெட் இன்று விண்ணில் பாய்கிறது

திருப்பதி, நவ. 01–

**கடலோர எல்லைகளைக் கண்காணிப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள சுமார் ரூ.1,600 கோடியில் 4,410 கிலோ எடை கொண்ட அதிநவீன சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள் எல்.வி.எம்.-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி மையத்தின் 2வது ஏவுதளத்தில் இருந்து இன்று மாலை விண்ணில் பாய்கிறது.**

கடந்த 2013ம் ஆண்டு செலுத்தப்பட்ட ஜிசாட்–7 (ருக்மணி) செயற்கைக்கோளின் ஆயுள்காலம் விரைவில் நிறைவடைய உள்ளது. அதற்கு மாற்றாக சுமார் ரூ.1,600 கோடியில் 4,410 கிலோ எடை கொண்ட அதிநவீன சிஎம்எஸ்–03 செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

இந்த செயற்கைக்கோள் சந்திரயான்–3 அனுப்பிய எல்.வி.எம்.-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி மையத்தின் 2வது ஏவுதளத்தில் இருந்து இன்று மாலை விண்ணில் பாய்கிறது. இதற்கான கவுண்ட்டவுன் நேற்று மாலை தொடங்கியது. இந்த திட்டம் வெற்றி அடைய, திருப்பதி கோவிலில் இஸ்ரோ தலைவர் நாராயணன் உள்ளிட்ட விஞ்ஞானிகள் வழிபாடு செய்தனர். அவர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் மரியாதை அளிக்கப்பட்டது.

பின்னர் இஸ்ரோ தலைவர் நாராயணன் நிருபர்களிடம் கூறியதாவது:– கடலோர எல்லைகளைக் கண்காணிப்பதற்காக இன்று எல்.வி.எம். 3–எம்5 ராக்கெட் சிஎம்எஸ்–03 செயற்கைக்கோளை ஏவ இலக்கு வைத்துள்ளோம். சிஎம்எஸ்–03 ஒரு தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஆகும். இந்த செயற்கைக்கோள் 4,400 கிலோ கிலோ எடை கொண்டது. இதுவரை புவிவட்டப் பாதைக்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்களில் இதுவே அதிக எடை கொண்டதாகும். இந்திய கடலோர எல்லைகளைக் கண்காணிப்பதுடன், போர்க் கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கு இடையே தொலைத்தொடர்பு சேவையை மேம்படுத்தவும் இது உதவும். செயற்கைக்கோள் ஏவுவதற்கு தற்போது ஸ்ரீஹரிகோட்டாவில் அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளது. இன்று மாலை 5.26 மணிக்கு ஏவ திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

# அரசியல் கட்சி கூட்டங்களுக்கு புதிய வழிகாட்டு நெறிமுறைகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, நவ. 02-

**தமிழ்நாட்டில் அரசியல் கட்சி கூட்டங்களுக்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனையில் ஈடுபட்டார். இதில்காவல்துறை உயர் அதிகாரிகள், முக்கிய அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.**

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாகவும், என்ன மாதிரியான வழிகாட்டுதல்களைப் பின்பற்றலாம், கூட்ட நெரிசலைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்துவது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டன.

### ஆந்திர பிரதேசத்தில் சோகம்:

# கோவிலில் கூட்ட நெரிசலில் சிக்கி 10 பேர் பரிதாபமாக பலி

விசாகப்பட்டினம், நவ. 02-

**ஆந்திராவில் கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 10 பேர் பரிதாபமாக பலியான சோக சம்பவம் அரங்கேறியுள்ளது. நெரிசலில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அருகேயுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். விபத்து குறித்து ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடு வருத்தம் தெரிவித்துள்ளார்.**



ஆந்திர பிரதேசம் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் காசிபுக்கா என்ற பகுதியில் வெங்கடேஸ்வரா சுவாமி என்ற கோவில் உள்ளது. ஏகாதசியை முன்னிட்டு கோவிலுக்கு பக்தர்கள் திரளாக வந்து கலந்து கொண்டுள்ளனர். அப்போது, திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டு உள்ளது.

பெண்கள், குழந்தைகள் உள்பட 10 பேர் பலியானார்கள். சிலர் காயம் அடைந்துள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அருகேயுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து, போலீசார் சம்பவ பகுதிக்கு உடனடியாக சென்றனர். தகவல் அறிந்து மாநில வேளாண் மந்திரி கே. அச்சன் நாயுடு அந்த பகுதிக்கு சென்றுள்ளார். அவர் சம்பவம் பற்றி கோவில் நிர்வாகிகளிடம் விவரம் கேட்டறிந்து உள்ளார். இதன் தொடர்ச்சியாக போலீசார் அதிக அளவில் குவிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த விபத்து குறித்து ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, "ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள காசிபுக்கா வெங்கடேஸ்வரா கோயிலில் கூட்ட நெரிசலில் சிக்கி பக்தர்கள் உயிரிழந்தது மிகவும் வருத்தமளிக்கிறது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகளைக் கண்காணிக்குமாறு உள்ளூர் அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொண்டுள்ளேன் என தெரிவித்துள்ளார்.

# வங்கக்கடல் பகுதியில் புதிய புயல் சின்னம் உருவாகிறது

## வரும் 7-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, நவ. 02-

**அடுத்த 24 மணி நேரத்தில் மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும் என்றும்,வரும் 7-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நேற்று முன்தினம் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், கிழக்கு-வடகிழக்கு திசையில் நகர்ந்து, நேற்று காலை 05.30 மணி அளவில் மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய வடகிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுகுறைந்து, காலை 08.30 மணி அளவில், அதே பகுதிகளில் நிலவுகிறது.

இது, அடுத்த 24 மணி நேரத்திற்கு, மேலும், கிழக்கு-வடகிழக்கு திசையில், வடகிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் வழியாக, தெற்கு குஜராத் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு மகாராஷ்டிரா கடலோரப்பகுதிகளை நோக்கி நகர்ந்து காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுகுறையக்கூடும்.

தெற்கு மியான்மார் கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக வரும் 7-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| -465.75 | -155.75 |
| பாயின்ட் 83,938.71 | பாயின்ட் 25,722.10 |



**தங்கம்**
1 சவரன் ₹ 90,480
1 கிராம் ₹ 11,310



**வெள்ளி**
1 கிலோ ₹ 166,000
1 கிராம் ₹ 166.00

**டாலர்** ₹ 88.79

**பெட்ரோல்** ₹ 100.75
**டீசல்** ₹ 92.34



### பாலியல் புகாரில் சிக்கிய

# இங்கிலாந்து இளவரசர் ஆண்ட்ரூவின் பட்டங்களை பறித்தார் மன்னர் சார்லஸ்

## வீட்டை காலி செய்யவும் உத்தரவு

**லண்டன், நவ. 02-**

பாலியல் புகாரில் சிக்கிய இங்கிலாந்து இளவரசர் ஆண்ட்ரூ அரச பட்டங்கள் பறிக்கப்பட்டதையடுத்து வீட்டை காலி செய்ய சார்லஸ் உத்தரவிட்டார்.



அமெரிக்காவைச் சேர்ந்த வர்ஜீனியா ஜியூப்ரே என்ற பெண், மறைந்த இங்கிலாந்து ராணி எலிசபெத் இரண்டாம் அவர்களின் இரண்டாவது மகனும் இளவரசருமான ஆண்ட்ரூ (வயது 65) மீது பாலியல் புகார் அளித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தனது இளம் பருவத்தில் பாலியல் தொந்தரவுக்கு ஆளானதாக அவர் குற்றம் சாட்டினார்.


ஆனால் இந்த புகாரை இளவரசர் ஆண்ட்ரூ தொடர்ந்து மறுத்து வந்தார். இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் வர்ஜீனியா ஜியூப்ரே திடீரென தற்கொலை செய்து கொண்டார். இது இளவரசர் ஆண்ட்ரூவுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அவருக்கு எதிராக கண்டனமும் விமர்சனமும் எழுந்தன. இதைத்தொடர்ந்து அவர், "அரசுப் பட்டங்களைத் துறக்கிறேன்; என்மீதான குற்றச்சாட்டுகள் மன்னர் மற்றும் அரச குடும்பத்தின் பணிகளுக்கு இடையூறாக உள்ளன. எனவே பொது வாழ்க்கையிலிருந்து விலக முடிவு செய்துள்ளேன்," என தெரிவித்தார்.

இந்த சூழ்நிலையில் தனது தம்பி இளவரசர் ஆண்ட்ரூவின் அனைத்து அரசுப் பட்டங்கள் மற்றும் சலுகைகளை பறிப்பதற்கான முறைப்படி நடவடிக்கையை மன்னர் சார்லஸ் தொடங்கி உள்ளார். அவருக்கு எதிரான நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளார். மேலும் ஆண்ட்ரூவின் வின்ட்சர் இல்லத்தை காலி செய்யுமாறு பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது. அரண்மனை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "இளவரசர் ஆண்ட்ரூவின் உடை, பட்டங்கள் மற்றும் கவுரவங்களை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இப்போதிலிருந்து அவர் ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் வின்ட்சர் என்று அழைக்கப்படுவார். அவரது வின்ட்சர் இல்லத்தை காலி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது; அவர் மாற்று தனியார் தங்குமிடத்துக்கு செல்வார்," என கூறப்பட்டுள்ளது.

மன்னர் சார்லசின் இந்த உத்தரவின் பேரில், இளவரசர் ஆண்ட்ரூ கிழக்கு இங்கிலாந்தில் உள்ள சாண்ட்ரீஸ்ஹாம் எஸ்டேட்டில் உள்ள மாற்று தனியார் தங்குமிடத்துக்கு செல்ல இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உலகின் மிகப்பெரிய மியூசியம் எகிப்தில் திறப்பு

**கெய்ரோ, நவ. 02-**



உலகின் மிகப்பெரிய மியூசியம் எகிப்தில் திறக்கப்பட்டது.

எகிப்தில் உலகின் மிகப்பெரிய மியூசியம் நேற்று திறக்கப்பட்டுள்ளது. ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் பெரிய பிரமிட் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. நவீன காலத்தின் எத்தகைய கலாசார அடையாளங்களை அருங்காட்சியகம் கொண்டுள்ளது என்பதை மக்கள் அறிந்துகொள்வதே இதன் நோக்கம்.

உலகின் மிகப்பெரிய தொல்பொருளியல் அருங்காட்சியகமாக இது விளங்குகிறது. இங்கு சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான கலைப் பொருட்கள் உள்ளது. அருங்காட்சியகத்தில் உள்ள மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுவது எகிப்திய மன்னர் டுட்டன்காமுனின் கல்லறை. இந்தக் கல்லறை முதல் தடவையாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மியூசியம் அக்டோபர் 2024-ல் பொதுமக்களுக்கு ஓரளவு திறக்கப்பட்டது. பிரமாண்ட சிலைகள், பழங்கால கல்லறைகளுடன் வரிசையாக அமைந்துள்ள 6 மாடி படிக்கட்டைச் சுற்றி கட்டப்பட்டுள்ளது. இது அருகிலுள்ள பிரமிடுகளின் காட்சியுடன் கூடிய பரந்த சாளரத்திற்கு வழிவகுக்கிறது. வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் ரோமானிய சகாப்தம் வரையிலான 5,000 ஆண்டுகால வரலாற்று நாகரிகத்தை 12 காலரிகள் சித்தரிக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள், ஆய்வகங்கள் மற்றும் மறுசீரமைப்பு பட்டறைகளுக்கு திறந்திருக்கும் சேமிப்பு பகுதிகளும் இந்த வளாகத்தில் அடங்கும். நவம்பர் 4-ம் தேதி முதல் பொதுமக்கள் இந்த மியூசியத்தை பார்வையிடலாம்.




**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் இஸ்லாமியர்களுக்கான அரசு பொது கபர்ஸ்தான்கள் அமைத்திட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடங்களை சுற்றுச்சுவர், பெயர் பலகை மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்து முறையாக பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கிடும் விதமாக அதற்கான ஆணையினை நகராட்சி ஆணையர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடம் வழங்கினார்.**

### மண்டல பூஜைக்காக

# சபரிமலையில் நடை வரும் 16-ம் தேதி திறப்பு

**திருவனந்தபுரம், நவ. 02-**

சபரிமலையில் மண்டல பூஜைக்காக வருகிற 16-ம் தேதி முதல் நடை திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் இந்த ஆண்டுக்கான மண்டல பூஜை வருகிற 17-ந்தேதி தொடங்குகிறது. இதற்காக 16-ந்தேதி மாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. மண்டல பூஜை டிசம்பர் மாதம் 27-ந் தேதி நடைபெறுகிறது. சபரிமலையில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய கடந்த சில ஆண்டுகளாக ஆன்லைன் முன்பதிவு முறை கடைபிடிக்கப் பட்டு வருகிறது. இந்த ஆண்டு மண்டல மற்றும் மகர விளக்கு பூஜை சீசன் காலத்திலும் அந்த முறை அமல்படுத்தப்படுகிறது.

தினமும் ஆன்லைன் முன்பதிவு (மெய் நிகர் வரிசை) மூலமாக 70ஆயிரம் பேருக்கும், ஸ்பாட் புக்கிங் (உடனடி முன்பதிவு) மூலமாக 20 ஆயிரம் பேருக்கும் என தினமும் 90 ஆயிரம் பேருக்கு சாமி தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. மண்டல பூஜை காலத்தில் சாமி தரிசனம் செய்வதற்கான ஆன்லைன் முன்பதிவு நேற்று (1-ந்தேதி) மாலை 5 மணிக்கு தொடங்குகிறது. sabarimalaonline.org என்ற இணையதளம் மூலமாக பக்தர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

ஸ்பாட் புக்கிங்' மூலம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்வதற்கு பம்பை, நிலக்கல், எருமேலி, வண்டிப்பெரியார், சன்னிதானம் ஆகிய 5 இடங்களில் முன்பதிவு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. அந்த மையங்களில் பக்தர்கள் முன்பதிவு செய்து, அன்றைய தினமே சாமி தரிசனம் செய்யலாம். மேலும் இந்த ஆண்டு சபரிமலைக்கு வரும் ஐயப்ப பக்தர்கள் விபத்தில் சிக்கி மரணம் அடைந்தால், அவர்களுக்கு விபத்து காப்பீடு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. அதாவது கடந்த காலத்தில் பத்தினம்திட்டா, கோட்டயம், இடுக்கி, ஆலப்புழா ஆகிய மாவட்டங்களில் விபத்தில் உயிரிழக்கும் ஐயப்ப பக்தர்களின் குடும்பத்துக்கு ரூ5.லட்சம் விபத்து காப்பீடு வழங்கப்பட்டு வந்தது.

அது இந்த ஆண்டுமாநில எல்லைக்குள் எந்த பகுதியில் விபத்து நடந்து, அதில் மரணம் அடையும் ஐயப்ப பக்தர்களின் குடும்பத்திற்கு ரூ.5லட்சம் விபத்து காப்பீடு வழங்கும் வகையில் விரிவு படுத்தப்பட உள்ளது. மேலும் இறந்தவர்களின் உடலை அவரவர் வீடுகளுக்கு கொண்டு செல்ல கேரள மாநிலத்திற்குள் ரூ.30 ஆயிரமும், வெளி மாநில பக்தர்களுக்கு ரூ.1 லட்சம் வரையிலும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அது மட்டுமின்றி மலையேற்றத்தின்போது மரணம் ஏற்பட்டால் ஐயப்ப பக்தர்களின் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் வழங்கப்படுகிறது. இதற்காக ஆன்லைன் முன்பதிவு செய்யும் பக்தர்களிடம் இருந்து முன்பதிவு செய்யப்படும் போது ரூ.5 பெறப்படுகிறது.

### சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க

# திருப்பூரில் இருந்து செல்லும் பீகார் மாநில தொழிலாளர்கள்

**திருப்பூர், நவ. 02-**

திருப்பூரில் தங்கி இருந்த தொழிலாளர்களும் தற்போது தங்கள் மாநில தேர்தலில் வாக்களிக்க சொந்த மாநிலத்திற்கு செல்ல முனைப்பு காட்டி வருகின்றனர்.

தொழில் நகரமான திருப்பூரில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பனியன் நிறுவனங்கள் மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது. இங்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்களும், வடமாநிலங்களை சேர்ந்தவர்களும் பணியாற்றி வருகின்றனர். இதில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் திருப்பூரில் தங்கி இருந்து பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தீபாவளி பண்டிகைக்கு சொந்த ஊர் சென்ற நிலையில் வருகிற 6-ந்தேதி பீகார் மாநில சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் திரும்பி வராமல் அங்கேயே தங்கியுள்ளனர். மேலும் திருப்பூரில் தங்கி இருந்த தொழிலாளர்களும் தற்போது தங்கள் மாநில தேர்தலில் வாக்களிக்க சொந்த மாநிலத்திற்கு செல்ல முனைப்பு காட்டி வருகின்றனர். இதன் காரணமாக திருப்பூர் ரெயில் நிலையம் வழியாக பீகார் செல்லும் ரெயில்களில் கூட்டம் அலைமோதி காணப்படுகிறது.

### ரஷ்யப்படைகளுக்கு வினியோகம் செய்யும்

# முக்கிய எரிபொருள் பைப்லைனை தாக்கி அழித்தது உக்ரைன் படைகள்

**மாஸ்கோ, நவ. 02-**

ரஷ்யாவின் எரிபொருள் கட்டமைப்புகளை குறிவைத்து உக்ரைன் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளது.

ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோ பிராந்தியத்தில் உள்ள, முக்கிய எரிபொருள் பைப்லைனை தாக்கி அழித்ததாக உக்ரைன் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் தொடர்ந்து எரிபொருள் கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்திய நிலையில், இந்த தாக்குதலை உக்ரைன் நடத்தியுள்ளது.

மாஸ்கோ மற்றும் நிஸ்னி நோவ்கொரோடுவில் உள்ள ரியாசான் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து 400 கி.மீ. நீளம் கொண்ட கோல்ட்செவோய் பைப்லைன்கள் மூலம் விமான எரிபொருள், டீசல், பெட்ரோல் ஆகியவை ரஷ்ய படைகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த எரிபொருள் பைப்லைன்களை தாக்கி அழித்ததாக உக்ரைன தெரிவித்துள்ளது. இது ரஷ்யப் படைகளுக்கு மிகப்பெரிய பின்னடைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெள்ளிக்கிழமை நள்ளிரவு இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைனில் உள்ள எரிபொருள் கட்டமைப்புகள் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருவதற்கு பதிலடியாக உக்ரைன் இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

ராமென்ஸ்கி மாவட்டம் அருகே உள்ள கட்டமைப்பை இலக்காக நிர்ணயித்து மூன்று எரிபொருள் லைன்களையும் தாக்கி அழித்ததாக தெரிவித்துள்ளது. இந்த எரிபொருள் பைப்லைன்கள் 3 மில்லியன் டன் வரை விமான எரிபொருள், 2.8 மில்லியன் டன் வரை டீசல், 1.6 மில்லியன் டன் வரை பெட்ரோல் எடுத்துச் செல்லும் திறன் கொண்டது. நேற்று காலை ரஷ்யா, தென் உக்ரைன் பகுதியில் பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில் ஒருவர் உயிரிழந்த நிலையில், 15-க்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர். மத்திய போல்டாவா பிராந்தியில் உள்ள கியாஸ் நிலையம் மீதும் ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

# நான் மக்களுக்காக உழைத்தேன், என் குடும்பத்திற்காக அல்ல: நிதிஷ் குமார்

**பாட்னா, நவ. 02-**

பீகார் சட்டசபை தேர்தலில் போட்டியிடும் நிதிஷ்குமார் நான் மக்களுக்காக உழைத்தேன் என் குடும்பத்திற்காக அல்ல என்று தெரிவித்தார்.

243 தொகுதிகளை கொண்ட பீகார் சட்டசபைக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. முதற்கட்டமாக 121 தொகுதிகளுக்கு வரும் 6ம் தேதியும், இரண்டாம் கட்டமாக 122 தொகுதிகளுக்கு வரும் 11ம் தேதியும் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் 14ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இதனிடையே, பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. ஐக்கிய ஜனதா தளம், பாஜக இடையேயான ஆளும் கூட்டணியில் மாநில முதல்-மந்திரியாக நிதிஷ் குமார் செயல்பட்டு வருகிறார். அதேவேளை, எதிர்க்கட்சிகளாக உள்ள ராஷ்டிரிய ஜனதா தளம், காங்கிரஸ் கூட்டணி அமைத்து தேர்தலை எதிர்கொள்ள உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் அம்மாநிலத்தில் அரசியல் களம் சூடு பிடித்துள்ளது. இந்நிலையில், பீகார் முதல்-மந்திரியும், ஐக்கிய ஜனதா தளம் கட்சி தலைவருமான நிதிஷ் குமார் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில் அவர் கூறியதாவது.

சகோதர, சகோதரிகளே உங்களுக்கு சேவை செய்ய நீங்கள் எனக்கு 2005 முதல் வாய்ப்பு வழங்கினீர்கள். பீகாரியாக இருப்பது அவமானமாக பார்க்கப்பட்டது. அப்போது முதல் மக்களுக்காக இரவு, பகலாக உண்மையுடன் உழைத்து வருகிறோம். முந்தைய அரசுகள் பெண்களுக்கு எதுவும் செய்யவில்லை. நாங்கள் வலிமையான பெண்களை உருவாக்கியுள்ளோம். நான் மக்களுக்காக உழைத்தேன், என் குடும்பத்திற்காக அல்ல. எங்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பு தாருங்கள். இன்னும் அதிக வளர்ச்சியை கொண்டுவருவோம். அதிக வளர்ச்சியடைந்த மாநிலங்கள் பட்டியலில் பீகார் இடம்பெறும் என்றார்.

### அதிபர் தேர்தல் முடிவுக்கு எதிர்ப்பு:


# தான்சானியா வன்முறையில் 700 பேர் பலி

**டொடோமா, நவ. 02-**

கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவில் அதிபர் தேர்தல் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடந்த வன்முறையில் 700 பேர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவில் கடந்த 29-ந்தேதி நடந்த தேர்தலில் அதிபர் சாமியா சுலுஹூ ஹாசன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். ஆனால் தேர்தல் முடிவை எதிர்த்து நாடு முழுவதும் பெரும் போராட்டம் வெடித்தது. இது வன்முறை மற்றும் கலவரமாக மாறியது. இதை கட்டுப்படுத்த போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த போராட்டம் மற்றும் வன்முறையில் 700 பேர் வரை உயிரிழந்ததாக பிரதான எதிர்க்கட்சியான பதேமா தெரிவித்து உள்ளது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என பாதுகாப்புத்துறை வட்டாரங்களும் உறுதிப்படுத்தி உள்ளன. பலியானோர் எண்ணிக்கையை வெளியிட பல ஆஸ்பத்திரிகள் மறுத்து உள்ளன. இதனால் உயிரிழப்பு குறித்த துல்லிய எண்ணிக்கை வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

**02-11-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எதிர்பார்ப்புக்கு மேல் இலாபங்கள் அதிகரிக்கும். திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு சென்று மன மகிழ்ச்சி அடைவீர்கள். எல்லா வகையிலும் ஏற்றம் வரும். பெண்களால் லாபம் ஏற்படும்.

**ரிஷபம்:-** தனவரவுகள் தாராளமாக இருக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் உற்சாகம் மிகும். வங்கி அதிகாரிகள் தொழில் விரிவாக்கத்துக்கு கடன் தந்து உதவுவர்.

**மிதுனம்:-** முயற்சி திருவினையாக்கும். எளிதில் வெற்றி கிடைக்கும். தீர்த்த யாத்திரைகள் தெய்வ நம்பிக்கை கூடும். மன அமைதி கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் இருக்கும்.

**கடகம்:-** அரசு உதவிகள் தாமதப்படும். ஆரோக்கியக் குறைவினால் வேண்டாத மனக்கவலை ஏற்படலாம். மனைவியின் கலகத்தால் குடும்பத்தினரிடையே ஒற்றுமை குறையலாம்.

**சிம்மம்:-** பலவழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். வாகன சுகமும், மதிப்பும் மரியாதையும் கூடும். காதல் வலையில் விழ நேரும். சிலருக்கு மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**கன்னி:-** புதுப்பெண்கள் சிநேகத்தால் மகிழ்ச்சி உண்டாகும். சொந்த வீடு வாங்க முயல்வீர்கள். இதுவரை இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கி, எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு உண்டாகும். 6

**துலாம்:-** கடினமாக உழைத்தால் கட்டாயம் வெற்றி கிட்டும். வாழ்க்கையில் முன்னேற்றம் காண தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கதவைத் தட்டும்.

**விருச்சிகம்:-** பழகிய தோழர்களே பணமோசம் செய்வர் எனவே, ஏமாறாமல், எதிலும் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். மற்றவர் வேலையில் மூக்கை நுழைக்க உங்கள் காரியங்கள் தடைப்படும்.

**தனுசு:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை அதிகரிக்கும். மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும். மனைவியின் ஒத்துழைப்பால் பணவரவு அதிகரிக்கும்.

**மகரம்:-** உடற் சோர்வால் உள்ளமும் சோர்வடையும். எடுத்த காரியங்களில் தன்னம்பிக்கையுடன் ஈடுபடுங்கள். குடும்பத்தாரிடையே வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:-** தங்கள் தனிப்பட்ட திறமை காரணமாக காரிய வெற்றி ஏற்பட்டு பாராட்டும் பெறுவீர்கள். பலவழிகளிலும் பணவரவு உண்டு. வியாபாரிகளுக்கு, இன்று சிறந்த பேச்சே மூலதனமாகும்.

**மீனம்:-** வியாபாரிகளுக்கு இலாபங்கள் ஓரளவு குறையும். பெண்களால் பெரிய தொகை விரயமாகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் தீரும். உங்கள் திறமைக்கு மதிப்பு இருக்காது.

# இந்தியாவின் தொலைநோக்கு பார்வை தெளிவாக உள்ளது

## மலேசியாவில் ராஜ்நாத்சிங் பேச்சு

**கோலாலம்பூர், நவ. 02-**

இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை எப்போதும் தெளிவாக உள்ளது என்றும், அனைத்து வித அழுத்தங்களில் இருந்தும் இந்தோ - பசிபிக் விடுபட வேண்டும் என்பதே இந்தியாவின் கொள்கை என்று மலேசியாவில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சர்களுக்கான கூட்டத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசியான் - இந்தியா பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், "ஆசியான் - இந்தியா பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் கடந்த 2010-ல் ஹனேயில் தொடங்கப்பட்டபோது அது தனது தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தியது. கடந்த 15 ஆண்டுகளாக இந்த மன்றம், உரையாடல்களுக்கான தளமாக இருப்பதற்கு அப்பால், நடைமுறை பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒரு கட்டமைப்பாக மாறி உள்ளது.

இந்தியாவின் இந்தோ - பசிபிக் பாதுகாப்பு தொலைநோக்குப் பார்வை, பாதுகாப்பு ஒத்துழைப்பை பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்ப பகிர்வு, மனிதவள முன்னேற்றம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கிறது. பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு இடையேயான இந்த தொடர்புதான் இந்தியா - ஆசியான் கூட்டாண்மையின் உண்மையான ஆன்மா. இந்தியாவை பொறுத்தவரை, ஆசியான் - இந்தியா பாதுகாப்பு கூட்டாண்மை என்பது அதன் கிழக்கு நோக்கிய கொள்கை மற்றும் பரந்த இந்தோ - பசிபிக் பார்வையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். 2022ல் ஆசியான் - இந்தியா கூட்டாண்மை விரிவான மூலோபாய கூட்டாண்மையாக உயர்த்தப்பட்டபோது, அது அரசியல் முதிர்ச்சியின் அடையாளமாக மட்டுமின்றி, பிராந்திய முன்னுரிமைக்கான ஆழமான சான்றாகவும் இருந்தது.

இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை எப்போதும் தெளிவாக உள்ளது. திறந்த, உள்ளடக்கிய, விதிகளை அடிப்படையாகக் கொண்ட இந்தோ - பசிபிக் என்பதே அது. எதிர்கால பாதுகாப்பு ராணுவத்திறனை மட்டும் சார்ந்திருக்காது. பகிரப்பட்ட வளங்களை நிர்வகித்தல், டிஜிட்டல் உள்கட்டமைப்பின் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு கூட்டுப் பதில் அளித்தல் ஆகியவற்றையும் சார்ந்திருக்கும்." எனத் தெரிவித்தார்.

### கரூர் மாவட்டத்தில் சோகம்:

# மணல் லாரி கவிழ்ந்து வடமாநில தொழிலாளர்கள் 3 பேர் உயிரிழப்பு

**கரூர், நவ. 02-**

கரூர் மாவட்டம் க.பரமத்தி அருகேயுள்ள கோடந்தூரில் தனியார் கிரஷர் செயல்படுகிறது. இங்கு 20-க்கும் மேற்பட்ட வடமாநிலத் தொழிலாளர்கள் தங்கி வேலை பார்த்து வருகின்றனர். நேற்று (நவ.1) அதிகாலை 5 மணிக்கு எம் சாண்ட் ஏற்றிக் கொண்டு லாரி கோவை புறப்பட்டது.

கரூர் வெங்கமேட்டைச் சேர்ந்த சந்தனகுமார் (41) லாரியை ஓட்டிச் சென்றுள்ளார். தென்னிலை அருகே முதலிகவுண்டம்பாளையம் அருகே செல்லும்போது கட்டுப்பாட்டை இழந்த லாரி சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் லாரியில் எம் சாண்ட் மீது அமர்ந்து பயணம் செய்த வடமாநிலத் தொழிலாளர்கள் சிக்கந்தர் கேட்டா (21), வித்யநாத் பிரபாகரன் (47), அஜய் பங்கரா (30) ஆகிய 3 பேரும் எம் சாண்ட் குவியலில் சிக்கி மூச்சுத் திணறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதில் பல்ஜெம்ஸ் பர்வா (30) கையில் எலும்பு முறிவு ஏற்பட்ட நிலையில் உயிருடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துமவனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த தென்னிலை போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்த காயமடைந்த பல்ஜெம்ஸ் பர்வாவை மீட்டு சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர், உயிரிழந்தவர்கள் உடல்களை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



சென்னை, கிண்டியில் சுற்றுச்சூழல் பூங்காவில், முதற்கட்டமாக நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச்செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் தொடங்கி வைத்தார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பன்னீர்செல்வம், சுப்பிரமணியன், சேகர்பாபு, மேயர் பிரியா, எம்.எல்.ஏக்கள் கணபதி, பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நம் தலைவர்கள் வழியில்

# தமிழ்நாட்டின் உரிமைகளை காப்போம்: முதல்வர் பதிவு

**சென்னை, நவ, 02-**

நம் தலைவர்கள் வழியில் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காப்போம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், இன்று நாம் வாழும் தமிழ்நாட்டின் பல பகுதிகளை நமக்காகப் போராடிப் பெற்றுத் தந்த குமரித் தந்தை மார்ஷல் நேசமணி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., முதலிய எண்ணற்ற போராளிகளுக்கு எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளில் என் வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன்.

போராடாவிட்டால் நமக்குச் சொந்தமான நிலம் மட்டுமல்ல, வாக்குரிமையே கூட பறிபோய்விடும் என அப்போதே காட்டிச் சென்றுள்ள நம் தலைவர்கள் வழியில் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காப்போம். தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும். என தெரிவித்துள்ளார்.

# தொழில்நுட்ப வலிமையால் ஆபரேஷன் சிந்தூர் கொள்கை

## ராணுவ தலைமை தளபதி பெருமிதம்

**போபால், நவ. 02-**

ஆபரேஷன் சிந்தூர் கொள்கை, தொழில்நுட்ப வலிமையால் மேற்கொள் ளப்பட்டது என்று ராணுவ தலைமை தளபதி தெரிவித் தார்.

பஹல்காம் தாக்குத லுக்கு பதிலடியாக கடந்த மே மாதம் பாகிஸ்தான் மீது ஆபரேஷன் சிந்தூர் நடவடிக் கையை இந்தியா மேற் கொண்டது.

பாகிஸ்தான், ஆக்கிர மிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை பாதுகாப்புப்படையினர் அழித்தனர். இந்நிலையில், மத்தியபிரதேசம் ரிவா மாவட்டத்தில் நடந்த நிகழ்ச் சியில் ராணுவ தளபதி உபேந்திர திவேதி பங்கேற் றார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:-


ஆபரேஷன் சிந்தூர் கொள்கை, தொழில்நுட்ப வலிமையால் மேற்கொள் ளப்பட்டது. இதனால் ஆப ரேஷன் சிந்தூர் வெற்றிபெற் றது. பாகிஸ்தானில் அப் பாவி மக்கள் பாதிக்கப்படக் கூடாது என முடிவெடுத் தோம். பயங்கரவாதிகள் மற் றும் அவர்களின் தலைவர்க ளையே தாக்கினோம். பயங் கரவாதிகள் உள்ள இடங்களி லேயே தாக்குதல் நடத்தப் பட்டது. பாதுகாப்பு கட்ட மைப்புகள், பொதுமக்களை குறிவைக்கவில்லை. ஆபரே ஷன் சிந்தூரின் நோக்கத்தை சாதித்தோம். இதன் மூலம் பாகிஸ்தானுக்கு வலிமை யான செய்தியை அனுப்பி னோம் என்றார்.

### கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து

# முதல் முறையாக கருத்து தெரிவித்த நடிகர் அஜித்

**சென்னை, நவ. 02-**

கரூர் சம்பவத்திற்கு ஒரு வர் மட்டுமே பொறுப்பல்ல என்று நடிகர் அஜித்குமார் முதல்முறையாக அந்த சம்ப வம் குறித்து கருத்து தெரிவித் துள்ளார்.



த.வெ.க. தலைவரும் நடி கருமான விஜய் கரூரில் பிரசா ரம் மேற்கொண்டார். அப் போது, ஏற்பட்ட கூட்ட நெரி சலில் 41 பேர் பலியான சம்ப வம் நாட்டையே உலுக்கியது. இந்த சம்பவம் தொடர்பாக யூடியூப் சேனல் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அஜித் பேசியிருக்கிறார். இது தொடர்பாக அஜித் கூறியிருப் பதாவது:-

கரூர் கூட்ட நெரிசலை வைத்து தமிழ்நாட்டில் நிறைய நடந்து விட்டது, கரூர் சம்பவத்திற்கு விஜய் மட்டும் பொறுப்பு அல்ல, நாம் எல் லோருமே பொறுப்பு. ரசிகர்க ளின் அளவு கடந்த எல்லை யற்ற அன்பு இதுபோன்ற நிகழ்வுகளை உருவாக்குகி றது. கூட்டத்தால் நாம் மிக வும் வெறித்தனமாகி விடுகி றோம். இது முழு சினிமா துறையையும் மோசமாக காட் டுகிறது. இந்த மீடியாவும் படங்களின் முதல் நாள் முதல் ஷோவை ரசிகர்கள் அது செய்தார்கள் இது செய் தார்கள் என பெரிதாக்கி காட் டுகிறது. இது ரசிகர்கள் மனதை மாற்றுகிறது. அன்பு வையுங்கள் போதும். ரசிகர் கள் என் மீது பொழியும் அன் புக்கு நான் எப்போதும் நன் றிக்கடன் பட்டு இருக்கி றேன். ஆனால் அதே அன்பு காரணமாகத்தான் நான் குடும் பத்துடன் வெளியில் செல்வ தில்லை. என் மகனை கூட நான் பள்ளிக்கு கொண்டு சென்று விட முடியாத நிலை இருக்கிறது'' என்று தெரிவித் துள்ளார்.

# தஞ்சையில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040-வது சதய விழா

## அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை



**தஞ்சாவூர், நவ. 02-**

உலகப் புகழ்பெற்ற தஞ் சாவூர் பெரிய கோயிலை கட் டிய மாமன்னன் ராஜராஜசோ ழனின் 1040-வது சதய விழாவை முன்னிட்டு நேற்று அரசு மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

உலகமே வியக்கும் அள வுக்கு தஞ்சாவூர் பெரிய கோயிலை கட்டிய மாமன் னன் ராஜராஜசோழனின் 1040-வது சதய விழா நேற்று முன்தினம் காலை தொடங் கியது. தொடர்ந்து கருத்தரங் கம், கவியரங்கம், பரதநாட்டி யம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதையடுத்து சதய விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று காலை திருக்கோயிலில் பணியாளர் களுக்கு புத்தாடைகள் வழங் கப்பட்டது. பின்னர், திரு முறை நூல்களை அலங்கரிக் கப்பட்ட யானை மீது வைத்து 100-க்கும் அதிகமான ஓதுவாமூர்த்திகளுடன் கோ யிலிருந்து புறப்பட்டு நான்கு ராஜ வீதிகளில் வீதியுலா நடைபெற்றது.

தொடர்ந்து மாவட்ட நிர் வாகம் சார்பில், கோயிலுக்கு வெளியே உள்ள ராஜராஜசோ ழன் சிலைக்கு தஞ்சாவூர் எம்பி ச.முரசொலி, மாவட்ட ஆட்சியர் மா.பிரியங்கா பங் கஜம், மேயர் சண்.ராமநாதன், அரண்மனை தேவஸ்தான அறங்காவலர் சி.பாபாஜி ராஜா போன்ஸ்லே, தருமபு ரம் ஆதீனம் 27 வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசி லாமணி தேசிகர் ஞானசம்பந் தர் பரமாச்சாரிய சுவாமிகள், சதய விழா குழு தலைவர் து.செல்வம், அறநிலையத் துறை உதவி ஆணையர் கோ.கவிதா உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினர். அத னைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சியினர், இயக் கத்தினர், தமிழ் அமைப்புகள் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து பெருவுடையார் மற்றும் பெரியநாயகி அம்ம னுக்கு மஞ்சள், சந்தனம், பால், தயிர், இளநீர் உள் ளிட்ட 39 வகையான மங்க ளப் பொருட்களால் பேரபி ஷேகம் நடைபெற்றது. விழா வுக்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம், இந்து சமய அறிநிலையத்துறை, அரண்மனை தேவஸ்தானம், இந்து சமய அறநிலையத்து றையினர் இணைந்து செய்த னர்.

# மாநிலங்களின் வளர்ச்சியில்தான் இந்தியாவின் வளர்ச்சி இருக்கிறது

## சத்தீஸ்கரில் பிரதமர் மோடி பேச்சு

**ராய்ப்பூர், நவ. 02-**

மாநிலங்களின் வளர்ச்சி யில்தான் இந்தியாவின் வளர்ச்சி இருக்கிறது என்று தெரிவித்துள்ள பிரதமர் நரேந் திர மோடி, உலகில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் முத லில் உதவிக்குச் செல்லும் நாடு இந்தியா என்று சத்தீஸ் கர் மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பெருமி தம் தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கரின் நவ ராய்ப்பூ ரில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் தியான மைய மான சாந்தி ஷிகார்-ஐ பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார். நிகழ்ச்சி யில் பேசிய பிரதமர் மோடி, “இன்று உலகில் எங்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டாலும், எங்கு ஒரு பேரழிவு ஏற்பட் டாலும் உதவி வழங்க ஒரு நம்பகமான கூட்டாளியாக இந்தியா உள்ளது. இந்தியா எப்போதும் உதவிக்கு முத லில் செல்கிறது. ஒவ்வொரு உயிரினத்திலும் கடவுளைக் காண்பவர்கள் நாம். நமது பாரம்பரியத்தில், உலகம் செழிக்கட்டும், அனைத்து உயிரினங்களிடையேயும் நல் லெண்ணம் மேலோங்கட்டும் என்ற பிரார்த்தனையுடன்தான் எந்த ஒரு மத நிகழ்வும் முடி வடைகிறது.

மாநிலங்களின் வளர்ச்சி யில்தான் இந்தியாவின் வளர்ச்சி இருக்கிறது. இந்தி யாவை வளர்ச்சியடைய செய்வதற்கான பணியில் அர சாங்கம் ஈடுபட்டுள்ளது. வளர்ந்த இந்தியாவை உரு வாக்கும் இந்த பயணத்தில் பிரம்ம குமாரிகள் போன்ற அமைப்புகள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. நான் பல பத்தாண்டுகளாக உங்கள் அனைவருடனும் தொடர்பில் இருக்கிறேன். நான் இங்கு விருந்தினராக வர வில்லை. நான் உங்களில் ஒரு வன்.

இன்றைய நாள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இன்று (நேற்று) சத்தீஸ்கர் நிறுவப் பட்டு 25 ஆண்டுகள் நிறைவ டைகிறது. ஜார்க்கண்ட், உத்த ராகண்ட் மாநிலங்களும் இன்று (நேற்று) 25 ஆண்டு களை நிறைவு செய்கின்றன. இந்த மாநில மக்கள் அனைவ ருக்கும் எனது மனமார்ந்த நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என தெரிவி த்தார்.

### கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்:

# வேலுச்சாமிபுரத்தில் 2-வது நாளாக சி.பி.ஐ. அதிகாரிகள் நேரில் ஆய்வு

## போக்குவரத்து முடங்கியதால் பொதுமக்கள் வாக்குவாதம்

**கரூர், நவ. 02-**

கருர் வேலுச்சாமிபுரத் தில் நேற்று காலை 2-வது நாளாக சி.பி.ஐ. அதிகாரிகள் 3டி ஸ்கேனர் உதவியுடன் காலை 7 மணி முதல் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வு நடைபெறும் இடம் இடம் கரூர் ஈரோடு சாலை என்ப தால் அப்பகுதியில் இருந்து பணிக்கு செல்லும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்ப டுத்தும் வகையில் தடுப்பு வேலி அமைத்திருந்தனர். இதனால் மக்கள் போலீஸா ருடனும், சி.பி.ஐ. அதிகாரிக ளுடனும் கடும் வாக்குவாதத் தில் ஈடுபட்டனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27-ம் தேதி நடைபெற்ற தவெக பிரச்சார கூட்ட நெரி சலில் சிக்கி 41 பேர் உயிரிழந் தனர். மேல் 110 பேர் காயம டைந்தனர். இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை சி.பி.ஐ. அதிகாரிகள் வேலுச் சாமி புறத்தைச் சேர்ந்த கடை களின் உரிமையாளர்கள் மற் றும் பொதுமக்களிடம் விசா ரணை மேற்கொண்டனர்.

தொடர்ந்து 2-வது நாளாக சனிக்கிழமை காலை 7 மணிக்கு சி.பி.ஐ. அதிகாரிகள் வேலுச்சாமி புரத்திற்கு சென்று வெள்ளிக்கிழமை நடத்திய ஃபாரோபோக்கஸ் கருவி மூலம் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டனர். கரு வழக்கில் எஸ்ஐடி குழு மற்றும் தனி நபர் குழு மற் றும் பொதுமக்கள் அளித்த பல்வேறு வாக்குமூலங்கள் அடிப்படையிலும், வீடியோ ஆதாரங்களின் அடிப்படையி லும் அவற்றினை ஒப்பீடு செய்வதற்காக சி.பி.ஐ. அதி காரிகள் வீடியோ ஆதாரங் களை மிகத் துல்லியமாக ஒப் பீடு செய்யும் 3டி லேசர் ஸ் கேனர் கருவியை பயன்ப டுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுமக் கள் வாக்குவாதம்: சி.பி.ஐ. அதிகாரிகள் சம்பவம் நடை பெற்ற இடத்தினை அங்கு லம் அங்குலமாக 3டி ஸ்கே னர் லேசர் கருவியுடன் அள வீடு செய்யும் பணிகளில் ஈடு பட்டு வருகின்றனர். இந்நி லையில் சி.பி.ஐ. அதிகாரிகள் பணிகள் மேற்கொள்ளும் இடம் கரூர் ஈரோடு சாலை என்பதால் அப்பகுதியில் இருந்து பணிக்கு செல்லும் பொது மக்களுக்கு இடை யூறு ஏற்படுத்தும் வகையில் தடுப்பு வேலி அமைத்திருந் தனர். இதனால் அலுவலகங் கள் மற்றும் வேலைக்கு விரைவில் செல்ல முடியா மல் பொதுமக்கள் அவதிப் பட்டதால் தடுப்பு வேலியை அகற்றுமாறு சி.பி.ஐ. அதிகா ரிகள், போலீஸாருடன் வாக் குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு பாது காப்புப் பணியில் ஈடுபட்டி ருந்த போலீஸார் அவர்களை சமாதானம் செய்து மாற்று வழியாக கோவை சாலைக்கு அனுப்பி வைத்தனர். இத னால் அங்கு சிறிது நேரம் பர பரப்பு ஏற்பட்டது.

# ஆந்திரா கூட்ட நெரிசல்: பிரதமர் மோடி இரங்கல்

**விசாகப்பட்டினம், நவ. 02-**

ஆந்திரா கூட்ட நெரிசல் சம்பவத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து நிவார ணம் அறிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகு ளம் மாவட்டத்தில் காசி புக்கா என்ற பகுதியில் வெங் கடேஸ்வரா சுவாமி என்ற கோவில் உள்ளது. ஏகாத சியை முன்னிட்டு கோவி லுக்கு பக்தர்கள் திரளாக வந்து கலந்து கொண்டுள்ள னர். அப்போது, திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் பெண்கள், குழந்தை கள் உள்பட 10 பேர் பலியா னார்கள். சிலர் காயம் அடைந் துள்ளனர். அவர்கள் சிகிச் சைக்காக அருகேயுள்ள மருத் துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், இந்த கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும் பங்களுக்கு இரங்கல் தெரி வித்து பிரதமர் மோடி தெரி வித்து இருப்பதாவது;- ஆந் திரா ஸ்ரீகாகுளம் கோவில் கூட்ட நெரிசலில் 10 பேர் பலி யான சம்பவம் மிகவும் வேதனை அளிக்கிறது. தங் கள் நெருங்கிய மற்றும் அன் பானவர்களை இழந்தவர்களு டன் என் எண்ணங்கள் உள் ளன. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். உயிரிழந்த வர்கள் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000 வழங்கப்படும். இவ் வாறு அதில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

கண் தானம் செய்வீர்

### மிகுந்த மனவேதனையில் இருக்கிறேன்:

# அ.தி.மு.க.விலிருந்து நீக்கியதற்கு எதிராக வழக்கு தொடர்வேன்

## செங்கோட்டையன் எம்.எல்.ஏ. பேட்டி

**ஈரோடு, நவ. 02-**

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கியது வேதனையாக உள் ளது. மனவேதனையில் இருக் கிறேன் என்று தெரிவித்துள்ள செங்கோட்டையன், கட்சி வலிமையாகவும், ஒற்றுமை யாகவும் இருக்க வேண்டும் என்பதே எனது நோக்கம் என் றார். மேலும் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கியது தொடர்பாக வழக்கு தொடர்வேன் என் றும் அவர் தெரிவித்துள்ளார்.



அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டது பற்றிய கேள் விக்கு பதிலளித்த செங்கோட் டையன், ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் அலுவலகத்தில் இதுபற்றி விளக்கம் அளித்து பேசுவேன் என கூறினார். இந்த நிலை யில், ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் நேற்று காலை 10 மணியள வில் தன்னுடைய ஆதரவா ளர்களுடன் செங்கோட்டை யன் ஆலோசனை நடத்தி னார். இதன்பின்னர் காலை 11 மணியளவில் செய்தியாளர் களை சந்தித்து பேட்டிய ளித்து உள்ளார். அப்போது அவர் கூறும்போது, 1975-ம் ஆண்டில் கோவையில் நடந்த முதல் பொதுக்குழுவை சிறப் பாக நடத்தி எம்.ஜி.ஆரின் பாராட்டை பெற்றவன்.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலத்தில் கட்சி வலிமை யோடு இருக்க அயராது பணி யாற்றினேன். ஜெயலலிதா வழியில் கட்சியில் என்னை அர்ப்பணித்து கொண்டு பய ணித்தவன். அ.தி.மு.க.வுக்காக என்னை அர்ப்பணித்து கொண்டேன். கட்சி உடைந்து விட கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பேத என்னுடைய நோக்கமாக இருந்தது. ஜெயலலிதா மறைந்த பிறகு கட்சியை வழிநடத்த சசிகலா என்னி டம் பேசினார். ஜெயலலிதா மறைந்த பிறகு 2 முறை வாய்ப்பு கிடைத்தும் கட்சி உடைந்து விட கூடாது என்ப தற்காக விட்டு கொடுத்தேன். எடப்பாடி பழனிசாமியை பரிந்துரைத்தேன் என்றார். எடப்பாடி பழனிசாமி பொறுப்பேற்ற பின்னர் 2019, 2021 உள்ளாட்சி தேர்தல், 2024 தேர்தலில் அ.தி.மு.க. தோல்வி அடைந்தது. பொதுச்செயலாளராக பொ றுப்பேற்ற பின்னர் ஒரு முறை கூட வெற்றி பெறாத வர்.

நான் விதித்தது கெடு அல்ல. பேசி முடிவெடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் கூறினேன். கட்சி ஒன்றி ணைய தொடர்ந்து வலியுறுத் தினோம். 10 நாட்களில் பேச்சு தொடங்கி, யாரை சேர்க்க வேண்டுமென பொதுச்செயலாளர் முடிவெ டுக்கலாம் என்றேன். கட்சி வலிமையாகவும், ஒற்றுமை யாகவும் இருக்க வேண்டும். அதுவே எனது நோக்கம். எம். ஜி.ஆர் தோல்வி காணாதவர். ஜெயலலிதா ஒரு முறை தோற்றால், மறுமுறை வெற்றி காணும் சாதனையா ளர். கட்சியை வலிமைப்ப டுத்த ஒத்துழைப்பு தர வேண் டுமென்று நீக்கப்பட்டவர்க ளோடு பேசினேன்.

கருத்து கூறியதும் பொறுப்பில் இருந்து நீக்கம் செய்யப்பட்டேன். என்னை பி டீம் என்கின்றனர்.

யார் பி டீம் என நாடறி யும். நான் பி டீமில் இல்லை. ஏ1ல் பழனிசாமி இருக்கிறார். ஏ1 ஆகவே பழனிசாமி செயல்பட்டு கொண்டிருக்கி றார். கட்சியில் இருந்து நீக்கி யது வேதனையாக உள்ளது. மனவேதனையில் இருக்கி றேன். இரவு முழுவதும் தூங் கவில்லை. 53 ஆண்டுகள் கட் சியில் இருந்த சீனியர் என்ற வகையில் நோட்டீஸ் அனுப் பியிருக்க வேண்டும். ஒரு மூத்த தலைவரான எனக்கு நோட்டீஸ் கூட அனுப்ப வில்லை.

2026-ல் வெற்றி வாய்ப்பை இழந்தால், ஏன் முன்பே கூறவில்லை என கேட்டு விட கூடாது என்ப தற்காகவே கூறினேன். யார் துரோகம் செய்தது? எங்களி டம் எல்லாவற்றுக்கும் வீடி யோ, ஆடியோ ஆதாரம் உள் ளது. என் மீது களங்கம் சுமத் தப்பட்டு இருப்பது வேதனை ஏற்படுத்துகிறது.

பா.ஜ.க.வோடு கூட்டணி இல்லை என்று கூறினார். ஒவ்வொரு நாளும் ஒவ் வொன்றை பேசி வருகிறார். துரோகம் செய்வதில் பழனி சாமிக்கு நோபல் பரிசு தர லாம். என்னை குற்றம் சாட் டும் முன்பு, குற்றம் செய்த வர்கள் யார் என்று தெரிந்து செய்திருக்க வேண்டும். கொடநாடு கொலை வழக் குக்கு ஏன் குரல் கொடுக்க வில்லை என பேட்டியில் கூறியுள்ளார்.

அ.தி.மு.க.வின் தற்காலிக பொதுச்செயலாளராகவே அவர் இருக்கிறார். அ. தி.மு.க.வில் இருந்து என்னை நீக்கியது தொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் ஆலோ சித்து முடிவு செய்வோம். உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கினாலும், விதி யின்படி நீக்கவில்லை. இத னால், அடுத்த கட்ட நடவ டிக்கை பற்றி ஆலோசனை மேற்கொள்வோம். அவர், சர் வாதிகார போக்கில் செயல் பட்டு இருக்கிறார். அ.தி. மு.க.வில் இருந்து நீக்கியது தொடர்பாக வழக்கு தொடர் வேன் என்று செங்கோட்டை யன் பேட்டியின்போது கூறி னார்.

# பீகாரில் மாற்றத்தை கொண்டு வர மக்கள் முடிவு: தேஜஸ்வி யாதவ் நம்பிக்கை

**பாட்னா, நவ. 02-**

பீகாரில் தேர்தல் பிரச்சா ரம் மிகவும் சிறப்பாக நடக் கிறது. இந்த முறை மகா கூட் டணி சட்டப்பேரவை தேர்த லில் வெற்றி பெறும். பிரச்சா ரத்தில் நான் எங்கு சென்றா லும், மக்கள் மாற்றம் நிச்ச யம் என்று கூறுகிறார்கள். மக்கள் பீகாரில் மாற்றத்தைக் கொண்டுவர முடிவு செய் துள்ளனர்' என ஆர்.ஜே.டி. தலைவர் தேஜஸ்வி யாதவ் தெரிவித்தார்.

பீகார் தேர்தலில் மகா கூட்டணியின் தேர்தல் வாய்ப்புகள், ஆர்.ஜே.டி. குறித்த பா.ஜ.க.வின் குற்றச் சாட்டுகள் குறித்து ஆர். ஜே.டி. தலைவரும், மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளருமான தேஜஸ்வி யாதவ் ‘தி இந்து’ நாளித ழுக்கு அளித்த நேர்காண லில், “பீகாரில் தேர்தல் பிரச் சாரம் மிகவும் சிறப்பாக நடக்கிறது. இந்த முறை மகா கூட்டணி சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெறும். பிரச்சாரத்தில் நான் எங்கு சென்றாலும், மக்கள் மாற் றம் நிச்சயம் என்று கூறுகி றார்கள். புதிய பீகார் மற்றும் புதிய அரசாங்கத்தை அமைப்பது பற்றி அவர்கள் பேசுகிறார்கள். கல்வி, நீர்ப் பாசனம், மருத்துவம், வேலைவாய்ப்புகள் மற்றும் உடனடி நடவடிக்கை பற்றிப் பேசுபவர்களே அரசாங் கத்தை அமைப்பார்கள் என்று மக்கள் கூறுகிறார்கள். பீகார் மக்கள் மகா கூட்டணி அரசாங்கத்தைத் தேர்ந்தெ டுப்பார்கள் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள் ளது. பிரதமர் நரேந்திர மோடியும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் பீகாருக்கு வரும்போதெல் லாம், எதிர்க்கட்சிகளை ‘காட்டாட்சி’ என்ற முத்திரை யுடன் கேலி செய்கிறார்கள். அவர்களிடம் பேசுவதற்கு வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. பிரதமராக இருந்தா லும் சரி, அமித் ஷாவாக இருந்தாலும் சரி, அவர்களின் வார்த்தைகளை நீங்கள் கவ னமாகக் கேட்டால், அவர் கள் எதிர்மறை சிந்தனை யால் நிறைந்தவர்கள். நாங் கள் நேர்மறை மற்றும் முற் போக்கான அரசியலைச் செய்ய இங்கே இருக்கி றோம். நாங்கள் வளர்ச்சி மற் றும் தொலைநோக்குப் பார்வை பற்றிப் பேசுகி றோம்'' என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், கடந்த முறையும், நான் முதல்வர் வேட்பாளராக நிறுத்தப்பட்டேன், எந்த மோசடியும் இல்லாதிருந் தால், நாங்கள் அரசாங்கத்தை அமைத்திருப் போம். இருப் பினும், இந்த முறை முழு பீகாரும் மாற்றத்தை விரும் புகிறது, ஏனெனில் தற்போ தைய ஊழல் நிறைந்த அர சாங்கத்தைப் பற்றி மக்கள் உண்மையிலேயே கவலைப் படுகிறார்கள். கடந்த 20 ஆண்டுகளாக தேசிய ஜனநா யக கூட்டணி பீகாரை ஆட்சி செய்தாலும், பீகார் மிகவும் ஏழ்மையான மாநிலம், இடம்பெயர்வு மற்றும் வேலையின்மை மிக அதி கம், தனிநபர் வருமானம் மிகக் குறைவு. தொழில்கள் அல்லது முதலீடு எதுவும் இல்லை. இதனால் மக்கள் இப்போது மாற்றத்திற்கான மனநிலையில் உள்ளனர் என் றார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....




**பீ**காரில் ஒரு கோடி வேலை வாய்ப் புகளை வழங்குவதாக பா.ஜ.க கூட்டணி தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளது. இது வரை அவர்கள் அதை வழங்காதது ஏன்? இப்போது அதைப்பற்றி கூறுவது ஏன்? பீகாரில் மெகா கூட்டணி ஏன் ஆட்சி அமைக்காது. நிச்சயமாக நாங்கள் ஆட்சி அமைப்போம்.

**- பிரியங்கா காந்தி**




**மு**த்துராமலிங்கத் தேவருக்கு மரி யாதை செலுத்த பசும்பொன் வந்து சென்ற செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கியது, தென் தமிழ்நாட்டு மக் களுக்கு நேர்ந்த அவமானம். பசும்பொன் னுக்கு விருந்தாளியாக வந்த செங்கோட் டையனை கட்சியிலிருந்து நீக்கிய பழ னிசாமி தென் தமிழ்நாட்டில் படுதோல் வியை சந்திப்பார்.

**- டி.டி.வி.தினகரன்**



**த**மிழ்நாடு வந்தாரை வாழ வைக்கும் மண். தமிழ்நாட்டில் பீகார் தொழிலாளர் கள் கடுமையாக உழைக்கிறார்கள். அவர் களுக்கு எந்த பாதிப்பும் இல்லை, யாரும் அவர்களை தாக்கவில்லை.பிரதமர் மோடி சாதி, மத, அரசியல் எல்லைகளைக் கடந்து செயல்படவும், பேசவும் வேண்டும். தமி ழகத்தில் கவர்னரை தவிர வேறு எந்த பீகா ரிக்கும் பிரச்சினை இல்லை.

**- துரை வைகோ**



**பீ**கார் தேர்தல் அறிக்கையில் இரண்டு முக்கிய விஷயங்கள் உள்ளன - ஒன்று விவ சாயிகளுக்கானது, மற்றொன்று பெண்களுக் கானது. பீகாரின் எதிர்காலத்தை யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை முடிவு செய்வதற்கான ஒரு வாய்ப்பாக இந்தத் தேர் தல் அமைந்துள்ளது. ராஷ்டிரிய ஜனதா தளம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் காட் டாட்சி திரும்பிவிடும்.

**- அமித்ஷா**

# திருவொற்றியூர் சங்கரா பள்ளியில் அறிவியல் கண்காட்சி



திருவொற்றியூர் நவ.02

திருவொற்றியூர் ஸ்ரீ சங்கர வித்ய கேந்திராமெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. திருவொற்றியூர் அஜாக்ஸ் அருகில் செயல்பட்டு வரும் ஸ்ரீ சங்கர வித்யா கேந்திரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பள்ளியின் தாளாளர் ஜெரங்கநாதன் அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனையின் பெயரில் தாளாளர் அவந்திகா ஹரிஹரன் தலைமையில் மேல்நிலைப்பள்ளி முதல்வர் மலர்விழி மற்றும் தொடக்கப் பள்ளி முதல்வர் சந்திரகலா முன்னிலையில் சென்னை மாநகராட்சி முதுநிலை பூச்சியியல் நிபுணர் டி. சாந்தி நரசிம்மன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 8ஆம்வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புக்கு உட்பட்ட மாணவ மாணவியர்கள் பங்கேற்ற அறிவியல் கண்காட்சி பள்ளியில் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். அறிவியல் கண்காட்சியில் தமிழ்மொழி துறைஆங்கிலம் ஹிந்தி மற்றும் பிரஞ்ச் மொழி துறை கணித வியல் உயிரியல் வேதியல் இயற்பியல் மற்றும் பொருளியல் வணிகவியல் அக்கௌண்ட்ஸ் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்ட அறிவியல் கண்காட்சி 2025 இல் பல்வேறு பிராஜெக்ட்களை காட்சிப்படுத்தி இருந்தனர். கள்.மாணவ மாணவியர்களின் ப்ராஜெக்ட்களை பார்வையிட்டு அவர்களின் படைப்புகளை ஊக்குவித்த ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

# சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதி, ராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.49 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகள்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்



சென்னை,நவ.02

அமைச்சர்.பி.கே.சேகர் பாபு, துறைமுகம் சட்டமன்ற தொகுதி, இராயபுரம் மண்டலத்தில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் சென்னைப் வளர்ச்சிக் குழுமத் தலைவர் அவர்கள், துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, இராயபுரம் மண்டலத்தில், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், வார்டு-57இல், டி.எஸ். பி.எஸ்.சி சாலையில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் கட்டடத்திற்கான கட்டுமானப் பணி, வார்டு-57ல், உ.சி. சாலையில் ரூபாய் 75 லட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் கட்டடத்திற்கான கட்டுமானப் பணி மற்றும் வார்டு-54ல், வால்டாக்ஸ் சாலை, நிருப்பள்ளி தெரு எதிரில் ரூபாய் 65 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடை கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் வார்டு- 59 ஐசக் தெருவில் ரூபாய் 79 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் மற்றும் வார்டு-55, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில் ரூபாய் 170 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை நடுநிலைப்பள்ளியில் பழுதடைந்த கட்டிடத்தை மட்டும் இடித்து, தரைத்தளத்தில் புதியதாக 5 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் சமையல் கூடத்துடன் கூடிய புதிய கட்டிடம் அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூபாய் 4.49 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளவும் விரைவாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடி தேவைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்து அதன் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வுகளின்போது, மேயர் பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு) விமலா ராணி, உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் கற்பகவள்ளி, உதவி கல்வி அலுவலர்கள் திருதணிகைவேலு, வேதவல்லி, மாமன்ற உறுப்பினர்கள் நவீன், வெ. பரிமளம், ராஜேஷ் ஜெயின், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வேளச்சேரி-தரமணியில் மக்களின் உடல்நலம் பேணும்வவகையில் நடந்த நடைபயணம் மற்றும் மிதிவண்டி பயணத்தில் கலந்து கொண்டவர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன்சான்றிதழ்களைவழங்கினார்.இதில்அரவிந்த்ரமேஷ்எம்எல்ஏ,ஆணையர் குமரகுருபரன், துணை ஆணையர் அதாப் ரசூல், மண்டல குழு தலைவர்கள் துரைராஜ், ரவிச்சந்திரன், தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் தலைவரை சுதாகர் கலந்து கொண்டனர்.

# ஒரு மண்டலத்துக்கு ரூ.1 கோடி வீதம் ஒதுக்கீடு செய்து சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி தீவிரம்

சென்னை நவ 02-

மழை ஓய்ந்த நிலையில், சென்னை முழுவதும் சேதமடைந்த சாலைகளை ரூ.15 கோடி மதிப்பில் சீரமைக்கும் பணி தொடங்கப்பட்டு, முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அடுத்த மழை வருவதற்குள் இப்பணிகளை முடிக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. பருவமழை காலம் வந்து விட்டாலே சென்னை மக்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்குவது என்பது எழுதப்படாத ஒன்றாக மாறிவிட்டது. ஏனென்றால், வெளுத்து வாங்கும் மழையால் தேங்கும் தண்ணீரை வேகமாக வெளியேற்றினாலும், சென்னையில் புதிதாக போடப்பட்ட சாலைகள் குண்டும் குழியுமாக மாறிவிடுகிறது.

வெள்ளநீர் சாலைகளில் கரைபுரண்டு ஓடும் போது தார்சாலைகள் சிதிலமடைந்து வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு மோசமாகி விடுகிறது. ஆண்டுதோறும் பருவமழை காலங்களில் இந்த பாதிப்பை சென்னைவாசிகள் சந்தித்தே ஆக வேண்டிய நிலைமை உள்ளது.தற்போது மோன்தா புயல் காரணமாக இதுவரை சென்னைக்கு பெரிய அளவில் பாதிப்பு இல்லை என்றாலும், 3 நாட்களாக இடைவிடாமல் தொடர்ந்து பெய்த மழையால், சென்னையில் பல இடங்களில் சாலைகள் கடுமையாக சேதமடைந்து காணப்படுகிறது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. இதனால் நகரில் உள்ள பேருந்து சாலைகள், உட்புற சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளன. குறிப்பாக வளரசரவாக்கம் ஆர்காடு சாலை, ஐயப்பந்தாங்கல், வானகரம் முதல் அம்பத்தூர் சாலை, சேலையூர், பாடி சிடி ஆர் ரோடு, தரமணி, மடிப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சாலைகள் தொடர் மழையால் கடுமையாக சேதமடைந்து காணப்படுகிறது. இது ஒருபுறம் என்றால் மறுபுறம், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் வாரிய பணிகள், மெட்ரோ ரயில் பணிகள், மின்வாரிய பணிகள் என பல்வேறு பணிகள் காரணமாக தோண்டப்பட்ட சாலைகளால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். குண்டும் குழியுமான சாலைகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகள் அந்த இடங்களை கடந்து செல்லவே நீண்ட நேரம் செலவழிக்க வேண்டியுள்ளது. இதனால் சென்னையில் வாகன போக்குவரத்து நெரிசல் என்பது கடந்த சில நாட்களாக அதிகமாக காணப்படுகிறது. சாலைகளில் சில இடங்களில் காணப்படும் திடீர் பள்ளத்தில் வாகன ஓட்டிகள் தடுமாறி விழுந்து செல்வதையும் பார்க்க முடிகிறது.

எனவே இதுபோன்ற பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க சென்னை மாநகராட்சி முடிவெடுத்துள்ளது. இத்தகைய சூழலில் தான் சென்னையில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகளை சென்னை மாநகராட்சி முழுவீச்சில் மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே, சாலைகள் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், தற்போது பருவமழை காலம் என்பதால் ஜனவரி மாதம் வரை தார்சாலைகள் அமைக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது கடந்த வாரம் பெய்த தொடர் மழைக்கு சில இடங்களில் சாலைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாவதை கவனத்தில் கொண்டு, தற்போது சாலைகளை தற்காலிகமாக சீரமைக்கும் பணிகள் வேகமாக நடந்து வருகிறது. மோசமாக பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள சாலைகள் புதிதாகவும் போடப்பட்டு வருகிறது.இது குறித்து, சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: வடகிழக்கு பருவமழை தொடங்கியது முதல் மழை வெளுத்து வாங்கி வருகிறது. குறிப்பாக கடந்த வாரம் பெய்த தொடர் மழையால் சென்னையில் பல இடங்களில் சாலைகள் சேதமடைந்துள்ளன. இந்த சாலைகளில் செல்லும் வாகன ஓட்டிகள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது தெரியவந்தது. மேலும் சில இடங்களில் விபத்துகளையும் சந்திப்பதாக தகவல் வந்தது.

இதை உடனடியாக தடுத்து நிறுத்தும் வகையில் சென்னை முழுவதும் மழையால் பாதிக்கப்பட்ட சாலைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. தற்போது மழை நின்று வெயில் அடித்து வருவதால் மோசமாக பாதிக்கப்பட்ட இடங்களில் ரூ.15 கோடி மதிப்பில் புதிதாக சாலைகளும் மற்ற இடங்களில் சாலைகளை செப்பனிடும் பணிகளும் முழுவீச்சில் நடந்து வருகிறது. அடுத்த மழை வருவதற்கும் இந்த பணிகளை முடிக்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# திருவொற்றியூர் சாத்துமாநகரில் அதிமுக பாக முகவர்கள் கூட்டம்



திருவொற்றியூர் நவ.02

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திருவொற்றியூர் தொகுதி 13வது வட்டஅதிமுக சார்பில் பாக முகவர்கள் கூட்டம் பகுதி செயலாளர் பரமசிவம் தலைமையில் வட்டகழக செயலாளர்கள் கே.எம்.சாகுல் அமிது வழக்கறிஞர் வி.டி.எஸ். இன்பநாதன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த முகாமில் மாவட்ட பகுதி வட்ட நிர்வா கிகள்மா. சுந்தர் எஸ். ஜமுனாராாணி எஸ்.மா.அரசு டி எஸ் பிரகாஷ் மதன் சுரேஷ் எம்.எஸ்.கார்த்தி கந்தன், பாஸ்கர், கோபி, ஜெயக் குமார், ஜெகா, தக்ஷிணாமூர்த்திஅருள்வசந்த் ஐ.டி.விங் குமரன்முகமது சமீர்,பாபு உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# மலேசியாவிலிருந்து கடத்தி வந்த 10 பாலி மைனாக்கள் பறிமுதல்: 3 பயணிகள் கைது

சென்னை நவ 02-

மலேசியாவில் இருந்து சென்னைக்கு வந்த தனியார் பயணிகள் விமானத்தில் கடத்திக் கொண்டுவரப்பட்ட அரிய வகை மலேசிய பாலி மைனாக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தல் பயணிகள் 3 பேரை சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து, இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம், சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்று முன் தினம் காலை வந்தது. விமானத்தில் வந்த பயணிகளை சுங்கத்துறை, ஏர் இன்டெலிஜென்ட் அதிகாரிகள் கண்காணித்தனர். அப்போது சென்னையைச் சேர்ந்த என்ற ரஹமத் (34) உள்பட 3 பேர், ஒரு குழுவாக சுற்றுலா பயணி விசாவில் மலேசியா சென்று விட்டு, இந்த விமானத்தில் வந்தனர். அவர்கள் மீது ஏர் இன்டெலிஜென்ட் அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவர்களை நிறுத்தி விசாரித்தனர். முன்னுக்குப் பின் முரணாக பேசியதால் உடைமைகளை பரிசோதித்தனர். அதில் இருந்த பிளாஸ்டிக் கூடைகளுக்குள் மலேசிய நாட்டின் அபூர்வ வகை பறவையான \\"பாலி மைனா\\" என்ற வெள்ளை நிற 10 பறவைகள் உயிருடன் கூண்டுகளுக்குள் மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர். பறவைகள் நீண்ட நேரம் பயணம் செய்து வந்ததால் களைப்புடன் மயக்க நிலையில் இருந்தன. உடனடியாக அந்த பறவைகளை வெளியில் எடுத்து, மயக்கத்தை போக்கி, காப்பாற்றினர்கள்.அதோடு அபூர்வ வகை பறவைகளை கடத்தி வந்த பயணிகளிடம் தொடர்ந்து விசாரணை நடத்தினர். அப்போது பாலி மைனாக்களை சென்னைக்கு கொண்டு வந்து, இன விருத்தி செய்ய வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்ய இருந்ததாகவும், பறவைகள் ஆர்வலர்கள், மற்றும் பங்களாக்களில் லவ் பேர்ட்ஸ் பறவைகள் வளர்ப்பவர்கள் இந்த பறவைகளை லட்சக்கணக்கில் பணம் கொடுத்து வாங்குவார்கள் என்றும் தெரிவித்தனர். ஆனால், இந்த பறவைகளை மலேசிய நாட்டிலிருந்து இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கு முறையான ஆவணங்கள் எதுவும் அவர்களிடம் இல்லை. பறவைகளுக்கான மருத்துவ சான்றிதழ்களும் இல்லை. இந்நிலையில் பாலி மைனாக்களை இந்தியாவுக்குள் அனுமதித்தால் வெளிநாட்டு நோய் கிருமிகள் நமது நாட்டில் பரவி பறவைகள், விலங்குகள் போன்ற உயிரினங்களுக்கும், மனித இனங்களுக்கும் பரவும் ஆபத்து இருப்பதாக மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்தனர்.இதையடுத்து 10 பாலி மைனாக்களையும் எந்த விமானத்தில் வந்ததோ, அந்த விமானத்திலேயே வந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பவும் சுங்க அதிகாரிகள் முடிவு செய்தனர். அதற்கான செலவுகள் அனைத்தையும் மலேசியாவில் இருந்து பறவைகளை சட்ட விரோதமாக கடத்திக் கொண்டு வந்த 3 பயணிகளிடம் வசூலிக்கவும் முடிவு செய்தனர். அதன்படி மலேசியாவுக்கு நேற்று இரவு சென்னையில் இருந்து புறப்பட்ட தனியார் பயணிகள் விமானத்தில் 10 பாலி மைனாக்களையும் அனுப்பி வைத்தனர். இதற்கிடையே அரிய வகை மலேசிய பறவைகளை முறையான ஆவணங்கள், மருத்துவ பரிசோதனைகள் இல்லாமல் கடத்திக் கொண்டு வந்த ரஹமத் உள்பட 3 பயணிகளையும், சுங்க அதிகாரிகள் சுங்க சட்டம் பிரிவின் கீழ் கைது செய்து விசாரித்தனர்.

இந்த அரிய வகை பறவைகள் யாருக்காக கடத்திக் கொண்டு வரப்பட்டது என்பது பற்றியும் விசாரணை நடக்கிறது. இந்த சம்பவம் சென்னை விமான நிலையத்தில் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பழவந்தாங்கல் பகுதியில் வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தை திருட முயன்றவர் கைது

.சென்னை நவ 02-

சென்னை, மூவரசம்பேட்டை, ரகுபதி நகர், 5வது தெருவில் வசித்து வரும் வினோத்ரா, என்பவர் அவரது பல்சர் இருசக்கர வாகனத்தை கடந்த 29 ந் தேதி அன்று இரவு, மேற்படி வீட்டின் முன்பு நிறுத்தி விட்டு, நள்ளிரவில் சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது, அடையாளம் தெரியாத ஒரு நபர் மேற்படி வினோத்ராவின் இருசக்கர வாகனத்தை திருட முயற்சி செய்து கொண்டிருந்தது தெரியவந்தது. உடனே வினோத்ரா அந்த நபரை பிடிக்க முற்பட்டபோது, அவர் அங்கிருந்து ஓடி தப்பிச் சென்றார். இது குறித்து வினோத்ரா, பழவந்தாங்கல் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.பழவந்தாங்கல் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி புகார்தாரரின் வீட்டில் இரவில் இருசக்கர வாகனத்தை திருட முயன்ற எதிரி கண்ணன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி கண்ணன் மீது ஏற்கனவே கஞ்சா, திருட்டு, வழிப்பறி உட்பட சுமார் 10 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி கண்ணன் விசாரணைக்குப்பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# வானகரம் பகுதியில் குட்கா புகையிலை பாக்கெட்டுகள் விற்பனை செய்தவர் கைது

சென்னை நவ 02-

சென்னை வானகரம் காவல் நிலைய ஆய்வாளர் மகேஸ்வரி தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் நேற்று முன் தினம் துண்டலம், திருவீதி அம்மன் கோவில் தெருவில் உள்ள மளிகை கடையை கண்காணித்து, சோதனை செய்தபோது, அங்கு சட்டவிரோதமாக குட்கா புகையிலை பாக்கெட்டுகளை மறைத்து வைத்து விற்பனை செய்தது தெரியவந்தது.

அதன்பேரில், வானகரம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகளை விற்பனை செய்த கண்ணன் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மொத்தம் 7.5 கிலோ கிராம் எடை கொண்ட ஹான்ஸ், கூலிப், உள்ளிட்ட குட்கா பாக்கெட்டுகள் மற்றும் 1 மோட்டார் சைக்கிள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.மேலும் விசாரணையில் எதிரி கண்ணன் மீது ஏற்கனவே 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி கண்ணன் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஆர்.கே நகர் பகுதியில் உடல் வலி நிவாரண மாத்திரைகள் விற்ற இருவர் கைது

சென்னை நவ 02-

சென்னை ஆர்.கே நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், ஆர்.கே நகர், ஐ.ஓ.சி யார்டு அருகே கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த 2 பேரை விசாரணை செய்து, அவர்கள் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் கவரை சோதனை செய்தபோது, அதில் உடல்வலி நிவாரண மாத்திரைகளை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், ஆர்.கே நகர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த எதிரிகள் 1.முரளிகிருஷ்ணன், 2. பகிருசின்னா, ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 80 எண்ணிக்கைகள் கொண்ட மாத்திரைகள் மற்றும் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் மேற்படி எதிரிகள் இருவரும் காசிமேடு பகுதியில் உள்ள ஒருவரிடமிருந்து உடல்வலி நிவாரண மாத்திரைகளை வாங்கி விற்பனைக்காக வைத்திருந்ததும், எதிரி முரளிகிருஷ்ணன் மீது ஏற்கனவே ஆர்.கே நகர் காவல் நிலையத்தில் ஒரு காய வழக்கு உள்ளதும் தெரியவந்தது. மேற்படி குற்றச்சம்பவத்தில் தொடர்புடைய மற்றொரு தலைமறைவு எதிரியை பிடிக்க காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தீபாவளி பண்டு நடத்தி சுமார் ரூ.13.36 லட்சம் பணமோசடி வழக்கில் பெண் கைது

சென்னை நவ 02-

சென்னை, வியாசர்பாடி, பி.வி.காலனி பகுதியில் வசித்து வரும் ஈஸ்வரி, மற்றும் அவரது உறவினர்கள் மற்றும் சிலர் சேர்ந்து செங்குன்றம் பகுதியைச்சேர்ந்த பரமேஸ்வரி என்பவரிடம் தீபாவளி பண்டு ரூ.1,000/- மற்றும் தீபாவளி மளிகை பண்டு ரூ.1,300/- வீதம் மொத்தம் 97 சீட்டுகள் 12 மாதங்கள் கட்டியுள்ளனர். இந்நிலையில் சீட்டு பணம் முதிர்வடைந்த பிறகு கடந்த மாதம் ஈஸ்வரி மேற்படி பரமேஸ்வரியிடம் சீட்டு பணத்தை திரும்ப கேட்ட போது, பரமேஸ்வரி, ஈஸ்வரிக்கு ரூ.56,000/- மற்றும் ஈஸ்வரியின் உறவினர் வெண்ணிலா என்பவருக்கு ரூ.1,20,000/- என மொத்தம் ரூ.1,76,000/- மட்டுமே திரும்ப கொடுத்து விட்டு மீதமுள்ள ரூ.13,36,200/- சீட்டு பணத்தை கொடுக்காமல் ஏமாற்றி விட்டு தலைமறைவாகிவிட்டார். இது குறித்து பாதிக்கப்பட்ட ஈஸ்வரி புளியந்தோப்பு காவல் மாவட்ட துணை ஆணையாளர் அவர்களிடம் கொடுத்த புகாரின் பேரில் எம்.கே.பி நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

எம்.கே.பி நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் தொடர்புடைய பரமேஸ்வரி, சென்னை என்பவரை கைது செய்தனர்.

மேலும் விசாரணையில் எதிரி பரமேஸ்வரி மாதாந்திர தீபாவளி பண்டு சீட்டு நடத்தி பணத்தை வசூல் செய்து வட்டிக்கு கொடுத்து மோசடி செய்துள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பரமேஸ்வரி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி பின்னர் சிறையில் அடைத்தனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# வழிப்பறி சம்பவங்களில் ஈடுபட்ட மூவர் கைது

சென்னை நவ 02-

சென்னை, கோயம்பேடு, அண்ணா பழ அங்காடியில் கடந்த 3 வருடங்களாக வேலை செய்து, அங்கேயே தங்கி வரும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த முபாரக் (எ) தாபாருல், என்பவர் கடந்த 29.ந் தேதி அன்று மதியம், கோயம்பேடு மார்க்கெட் பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் சாப்பாடு வாங்கிவிட்டு, கையில் செல்போன் வைத்துக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத 2 பேர் மேற்படி முபாரக் கையில் வைத்திருந்த ரெட்மி செல்போனை பறித்துக் கொண்டு, இருவரும் இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர். இது குறித்து முபாரக், கோயம்பேடு காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.கோயம்பேடு காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்ட வந்த நிலையில், கோயம்பேடு, ஐயப்பா நகர், மாநகராட்சி பூங்கா அருகே நின்று கொண்டிருந்த 3 நபர்களை பிடித்து விசாரணை செய்தபோது, 1.ஆகாஷ், 2.தீபக், 3.மனோஜ், என்பதும், பிடிபட்ட ஆகாஷ் மற்றும் தீபக் ஆகிய இருவரும் மேற்படி புகார்தாரர் முபாரக் என்பவரது செல்போனை பறித்துச் சென்றதும், ஆகாஷ் மற்றும் மனோஜ் ஆகிய இருவரும் சேர்ந்து கோயம்பேடு பகுதியில் மற்றொரு வழிப்பறி சம்பவத்தில் ஈடுபட்டு, தலைமறைவாக இருந்து வந்ததும் தெரியவந்ததுஅதன்பேரில், வழிப்பறி சம்பவங்களில் ஈடுபட்ட எதிரிகள் 1.ஆகாஷ், 2.தீபக், 3.மனோஜ் ஆகிய 3 பேரை கைது செய்தனர்.

# குளத்தில் தவறி விழுந்து 2 சிறுவர்கள் உயிரிழப்பு

சென்னை நவ 02-

சென்னை திருவேற்காடு அருகே அயனம்பாக்கத்தில் குளத்தில் தவறி விழுந்து 2 சிறுவர்கள் உயிரிழந்தனர். வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தபோது குளத்தில் தவறி விழுந்து 2 சிறுவர்களும் உயிரிழந்தனர்.

குளத்தில் மூழ்கி அண்ணன் ரியாஸ்(5), தம்பி ரிஸ்வான் (3) உயிரிழந்த சம்பவம் அப்பகுதியை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

ஈரோடு குளூர் ஊராட்சி செங்கரபாளையத்தில்

# உள்ளாட்சிகள் தின கிராம சபை கூட்டம்: சிறப்பு பார்வையாளராக கலெக்டர் ச.கந்தசாமி பங்கேற்பு



ஈரோடு.நவ.02-

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், குளூர் ஊராட்சி, செங்கரபாளையம் கிராமத்தில் ஊர்த்தலைவர் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி, சிறப்பு பார்வையாளராக கலந்துகொண்டார். இக்கூட்டத்தில், கலெக்டர் தெரிவித்ததாவது,

இன்றைய தினம் உள்ளாட்சிகள் தினத்தினை முன்னிட்டு, மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், குளூர் ஊராட்சி, செங்கரபாளையம் கிராமத்தில் கிராம சபை கூட்டம் நடைபெற்று வருகிறது. கிராம சபை கூட்டத்தின் முக்கிய நோக்கமானது ஜனநாயக ரீதியாக அரசு சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அப்பகுதி இளைஞர்கள், பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதாகும். இக்கிராமசபை கூட்டங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குட்பட்ட கிராமங்களுக்கு வழங்கப்படும் திட்டங்கள், ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஊராட்சி மன்றத் தலைவர் அல்லது ஊர்ப் பெரியவர் தலைமையில் விவாதிக்கப்படும். இதன் மூலம் கிராமங்களில் மேற்கொள்ளும் திட்டங்கள், செலவினங்கள் உள்ளிட்டவற்றை கிராமத்தில் உள்ள அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படைத்தன்மையாக அமைகிறது. மேலும் ஒரு கிராமத்தில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தவும் உருவாக்குவதற்கும், தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும், அனைவரும் ஒன்றிணைந்து வளர்ச்சியை ஏற்படுத்துவதும் கிராம சபை கூட்டங்களின் சிறப்பு. கிராம சபை கூட்டங்களில் இளைஞர்கள் அதிகளவில் பங்கு பெற வேண்டும். ஊராட்சிக்கு தேவையான அடிப்படை தேவைகள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குவதில் அவர்களின் பங்கு அதிகளவில் இருக்க வேண்டும்.

நமது மாநிலம் மருத்துவத்தில் சிறந்து விளங்குகிறது. குறிப்பாக கிராமப்புறங்களிலும் சிறப்பான மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மகளிர் உதவித் தொகை போன்ற எண்ணற்ற திட்டங்களை மக்களுக்காக வழங்கி வருகிறார்கள். மேலும், 12-ம் வகுப்பு முடித்து உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் 95 சதவீதம் பெற்று இந்தியாவிலேயே முதலிடம் பெறும் அளவிற்கு சிறந்த கட்டமைப்பை உருவாக்கி உள்ளார்கள். இதன் மூலம் சமுதாயத்தில் மனிதவளம் மேம்படுகிறது. நமது மாநிலத்தில் பணிபுரிய மற்ற மாநிலங்களிலிருந்து வருகை புரியும் சமயத்தில் நாம் தொழிற்கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு உயர்கல்வியினை பயின்று உலகளவில் பணிபுரியும் அளவிற்கு சிறந்து விளங்குகிறோம். இன்றைய தினம் இக்கூட்டத்திற்கு, மாணவ, மாணவியர்கள் வருகை புரிந்திருப்பது மிகச்சிறப்பு. மாணவ, மாணவியர்கள் பள்ளியில் பயின்று தேர்வு எழுதுவதோடு அல்லாமல் மென்மேலும், பற்பல புத்தகங்களையும், நாளிதழ்களையும் படிப்பதை கடமையாக கொள்ள வேண்டும். எந்த அளவிற்கு நாம் கல்வி கற்கின்றோமோ நம் முன்னேற்றம் அந்த அளவிற்கு சிறப்பாக அமையும். சிறப்பாக படித்து முன்னேறுவது உங்களின் முன்னேற்றம் மட்டுமல்லாமல் சமுதாயத்தின் முன்னேற்றம் ஆகும். மேலும், ஒவ்வொரு ஊராட்சியும் தன்னிறைவான ஊராட்சியாக உருவாகும்போது, பிற இடங்களுக்குச் செல்லும் தேவை இருக்காது, மேலும், தங்களின் தேவைகளை தாங்களே தீர்த்துக் கொள்ள முடியும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, கலெக்டர் கிராம சபை கூட்டத்தில் தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து, நினைவுப்பரிசுகள் வழங்கி கௌரவித்தார். மேலும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு மருந்துப் பெட்டகம், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு காய்கறி விதைத் தொகுப்புகளையும், 1 பயனாளிக்கு ராகி விதை தொகுப்பினையும் வழங்கினார். மேலும், பனை மர விதைகளை நட்டு வைத்தார். முன்னதாக, கலெக்டர் முன்னிலையில், கஸ்பாபேட்டை அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் உட்பட 401 நபர்கள் செங்கரப்பாளையம் நூலகத்தில் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர், வேளாண்மை இணை இயக்குநர் சிவக்குமார், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) குருசரஸ்வதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) லோகநாதன், உதவி இயக்குநர் (வேளாண்மை) பிரசாத், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருநாவுக்கரசு, சுமித்ரா உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# உள்ளாட்சி தின கிராம சபைக் கூட்டம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு சிறப்பு விருந்தினராக பங்கேற்பு

ஊட்டி,நவ.02-

நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம், நஞ்சநாடு ஊராட்சி அலுவலக வளாகத்தில், உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இக்கிராம சபைக்கூட்டத்தில், ஊரகப்பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், சுய உதவிக்குழுவினருக்கு அடையாள அட்டைகள் வழங்குதல், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம், ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு கூட்டப்பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில், கலெக்டர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 2 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தலா ரூ.2 ஆயிரம் மதிப்பிலான ஊட்டச்சத்து பெட்டகங்களையும், 5 பயனாளிகளுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், தலா ரூ.1,000- மதிப்பிலான மருந்து பெட்டகங்களையும், 5 பயனாளிகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கான உறுதி சான்றிதழ்களையும் வழங்கினார்.



கிராமசபை கூட்டத்தில், கலெக்டர் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மகளிர் திட்டம், சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில், மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஷபிலாமேரி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் பாலகிருஷ்ணன், மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சிவசங்கர், உதகை வட்டாட்சியர் சங்கர்கணேஷ், வட்டார மருத்துவ அலுவலர் (உதகை) மரு.முருகேசன், உதவி திட்ட அலுவலர் ஜெயராணி, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், அனிதா மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், மாவட்ட நிர்வாகம், பொது நூலகத்துறை மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும் 4வது புத்தகத் திருவிழா நிகழ்ச்சியின் ஒன்பதாவது நாளான நேற்று உதகை வித்யா விருட்ச நாட்டியப்பள்ளி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

# தாயுமானவர் திட்டத்தின் கீழ் பொருட்கள் விநியோகம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

ஊட்டி,நவ.02-

தமிழ்நாடு முதலமைச்சரின்; தாயுமானவர் திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத் திட்ட பொருட்கள் நவம்பர் 2025 மாதத்திற்கு 03.11.2025 மற்றும் 04.11.2025 ஆகிய நாட்களில் வழங்கப்படும். இத்திட்டத்தினை முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தவறாமல் பயன்படுத்தி கொள்ளுமாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# திமுக பயிற்சி பாசறைக்கூட்டம்

ஈரோடு நவ2-

மாமல்லபுரத்தில் முதலமைச்சர். ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தை தொடர்ந்து ஈரோடு தெற்கு மாவட்டம், கொடுமுடி தெற்கு ஒன்றியத்தில் என் வாக்குச்சாவடி வெற்றிவாக்குச்சாவடி எனும் பயிற்சி பாசறைக்கூட்டம் நடைபெற்றது . அதில் 2026




தேர்தலை எவ்வாறு கையாளுவது என்பது குறித்து ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் . கே. இ. பிரகாஷ் ஆலோசனை கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், வழக்கறிஞர் அணியினர், ஒன்றிய, பேரூர் கிளைக் கழக நிர் வா கி கள், ஆகி யோர் கலந்து கொண்டனர்.

# குழந்தைகள் தினத்தையொட்டி ஈரோடு வாசன் கண் மருத்துவமனையில் இலவச கண் மருத்துவ முகாம்



ஈரோடு: நவ 2-

ஈரோடு வாசன் கண் மருத்துவமனையில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நவம்பர் மாதம் முழுவதும் குழந்தைகளுக்கு இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

ஈரோடு ஈவிஎன் ரோட்டில் உள்ள வாசன் கண் மருத்துவமனையில் குழந்தைகள் வருகின்ற 14ஆம் தேதி குழந்தைகள் தினத்தை முன்னிட்டு இம்மாதம் முழுவதும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது என்று மருத்துவமனை டாக்டர் மனோரமா எஸ் பஹேதி தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும்போது குழந்தைகளுக்கு தற்போது கண் பார்வை குறைபாடுகள் ஏற்பட்டு வருகிறது. இதனை போக்குவதற்கு ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். மேலும் குழந்தைகள் செல் அதிகநேரம் பயன்படுத்துவதையும், டிவி போன்றவைகளை அதிக நேரம் பார்ப்பதை தவிர்க்க வேண்டும்.

பெற்றோர்கள் இதைக் கவனத்தில் கொண்டு குழந்தைகளுக்கு அதிக நேரம் விளையாடுவதற்கு நேரம் ஒதுக்கி கொடுக்க வேண்டும். 20 நிமிடங்கள் ஒரே பார்வையில் கவனத்தை செலுத்தி வந்தாலே கண்ணுக்கு பிரச்சனை ஏற்படும். எனவே 20 நிமிடங்கள் ஒரு செயலை செய்ய ஆரம்பித்தால் அதன் பின் தங்களது கவனத்தை வேறு திசைக்கு திருப்ப வேண்டும். மேலும் குழந்தைகளுக்கு தற்போது கண் பார்வை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஈரோடு வாசன் கண் மருத்துவமனையில் குழந்தைகளுக்கான இலவச கண் மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

இதனை பொதுமக்கள் மற்றும் பெற்றோர்கள் இந்த இலவச முகாமில் கலந்து கொண்டு குழந்தைகளின கண்களை பரிசோதனை செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பள்ளி குழந்தைகளுக்கு இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டது.

நிகழ்ச்சியினை சேலம், கோவை, ஈரோடு வாசன் ஐ கேர் மருத்துவமனை கிளை மேலாளர் வெங்கடேசன், சேலம் கிளை மேலாளர் செல்வம், ஈரோடு கிளை மேலாளர் கோவிந்தராஜ் மற்றும் அலுவலர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

ஈரோடு மாநகராட்சியில்

# தொழில் உரிமம் புதிய வரி விதிப்பை நீக்க கோரி ஈரோடு கிளாத் மெர்ச்சன்ட்ஸ் அசோசியேஷன் மனு



ஈரோடு நவ 2-

ஈரோடு கிளாத் மெர்ச்சன்ட்ஸ் அசோசியேஷன் தலைவர்எஸ்.சிதம்பரசரவணன் செயலாளர் எஸ். பாலசுப்பிரமணியன் பொருளாளர் யு விபாலமுருகன் ஆகியோர் நேற்று ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சி சந்திரகுமார் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் மற்றும் ஆணையாளரிடம் கோரிக்கை மனு ஒன்று கொடுத்தனர் அதில் கூறப்பட்டுள்ளதாவது

ஈரோடு மாநகராட்சியில் தொழில் செய்துவரும் அனைத்து நிறுவனங்களும் புதிய விதிகளின்படி உரிமக் கட்டணங்களை செலுத்தி புதியதாக தொழில் உரிமம் டிரேட் லைசென்ஸ் பெற வேண்டும் என 27.12.2024 அன்று தீர்மான எண்.716-ன் படி புதிய நடைமுறைக்கான தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இந்த தீர்மானத்தின்படி கடந்த ஏப்ரல் மாதம் ஒரு சில நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அனுப்பி இருந்தனர். அவ்வித வரிவிதிப்பை முற்றிலும் நீக்க வேண்டும் என கோரிக்கை வைத்து 28.09.2025-ல்.ஈரோடு கிளாத் மெர்ச்சன்ட்ஸ் அசோசியேஷன் மூலம் கோரிக்கை விடுத்திருந்தோம். பேட்டியா மூலமும் பலமுறை கோரிக்கை வைத்திருந்தோம். ஆயினும், தற்சமயம் ஒரு சில நிறுவனங்களுக்கு மேற்படி வரி விதிப்பை கட்டவேண்டும் என வலியுறுத்தியும் 7 நாட்களுக்குள் கட்ட தவறினால் கடையை பூட்டி சீல் வைக்கப்படும் எனவும் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

அனைத்து தொழில் நிறுவனங்களும் ஏற்கனவே இருந்த மாநில அரசின் சேல்ஸ் வரியைதான் மத்திய மாநில அரசுகளின் கூட்டு வரி விதிப்பாகிய ஜி எஸ் டிவரியாக செலுத்தி வருகிறோம். இதுவே தொழில் செய்வதற்கான உரிமம் மற்றும் வரி ஆகும்.மேலும் மாநகராட்சிக்கு தொழில் வரி கட்டி வருகிறோம். கடந்த 5-வருடங்களாக தொழில் வரி கட்டாமல் இருந்தவர்களிடமும் இந்த வருடம் கண்டிப்புடன் அனைத்து நிலுவை தொகைகளையும் வசூல் செய்து உள்ளனர்.

இந்த நிலையில் சென்டர் லைசென்ஸ் என்று புதியதாக வரி விதிப்பு எதற்கு வசூல் செய்ய வேண்டும்? ஏற்கனவே மாநகராட்சியினால் பன்மடங்கு உயர்த்தப்பட்ட சொத்து வரி மற்றும் மற்ற வரியினங்களை செலுத்த முடியாமல் பொதுமக்களும் வர்த்தகர்களும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி உள்ளனர்.

தமிழ்நாட்டில் வேறு எந்த மாவட்டத்திலும் இவ்வாறு தொழில் உரிமக் கட்டணம் செலுத்த அறிவிப்பு கொடுக்கப்படவில்லை. ஆகவே, நமது மாநகராட்சியிலும் இந்த புதிய வரிவிதிப்பை நீக்கக் கோரி மாமன்றத்தில் புதிய தீர்மானம் நிறைவேற்றி பொதுமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் ஏற்பட்டுள்ள சிரமத்தை போக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது



தஞ்சாவூரில் சாகுபடி செய்யப்பட்ட நெல் மூட்டைகள் 2000 டன் ஈரோடு மாவட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக ரயில் மூலம் வந்தன நெல் மூட்டைகள் லாரிகளில் ஏற்றி அரசு கிடங்கிற்க்கு கொண்டு செல்லும் பணி நடைபெற்றது

# பவானிசாகர் அணைக்கு 6 ஆயிரம் கன அடியாக நீர்வரத்து அதிகரிப்பு

ஈரோடு, நவ.2-

நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் உயர்ந்து தீபாவளி அன்று 102 அடியை எட்டியது. இதனால் அணைக்கு வந்த நீர் அப்படியே பவானி ஆற்றுக்கு திறந்து விடப்பட்டுள்ளது.இதன் காரணமாக பவானிசாகர் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.நேற்று காலை தொடர்ந்து 13-வது நாளாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 102 அடியாக நீடிக்கிறது.அணைக்கு 6,134 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலுக்கு 2000 கன அடியும், பவானி ஆற்றுக்கு 100 கன அடி நீரும் திறக்கப்பட்டுள்ளது. இதே போல் தடப்பள்ளி - அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 500 கன அடியும் திறக்கப்பட்டுள்ளது.இதேபோல் பவானி சாகர் அணையில் இருந்து பவானி ஆற்றுக்கு உபரி நீர் திறக் கப் பட் டுள் ள தால் ஈரோடு மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தளமாக உள்ள கொடிவேரி தடுப்பணையில் 14-வது நாளாக வெள்ளநீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதன் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்று ம் 14-வது நாளாக கொடிவேரி தடுப்பணையில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை நீடிக்கப்பட்டுள்ளது. இதைப்போல் பரிசல் இயக்கவும் தடை நீடிக்கிறது. இதைப்போல் குண்டேரி பள்ளம் அணைப்பகுதியில் மழை கொட்டி தீர்த்ததால் அணையின் முழு கொள்ளளவான 41.75 அடியை எட்டியது. இதை அடுத்து உபரி நீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

இதைப்போல் பெரும்பள்ளம் அணைப்பகுதிகளிலும் பரவலாக மழை பெய்ததால் அணையின் முழு கொள்ளளவான 30.84 அடியை எட்டி அணை நிரம்பியது.இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

ENROLLMENT NOTICE

After 10 Days of the publication of this Notice and within Three months There after S. Uma maheswari D/o , C Selvam Aged 43 years, permanently residing at Old No.24/2 New no 20 kaliaymman koil first Street mackeys garden Thousand lights Chennai 600006 . intend having my enrollment as an Advocate moved before the bar Council of Tamilnadu,Bar council Building high court campus Chennai - 600104.

Those who have any valid Objectons may notify the Same to the Bar council within ten Days.

S.Uma Maheswari

ENROLLMENT NOTICE

After 10 Days of the publication of this Notice and within Three months There after Janaki Barath kumar w/o , Barath Kumar .G Aged 43 years, permanently residing at NO. 11/27, Vacha manere, 3rd floor, First main Road, Kasturiba Nagar Adyar, Chennai 600020. intend having my enrollment as an Advocate moved before the bar Council of Tamilnadu,Bar council Building high court campus Chennai - 600104.

Those who have any valid Objectons may notify the Same to the Bar council within ten Days.

JanakiBarathKumar

ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months thereafter I, SHAHILA.J,D/O JINNAH, age-27, Permanently residing at, No.3/144, ARULANANDHA NAGAR, CHINNAMATHUR, MANALI, CHENNAI-600068.

Intend having my enrollment as an Advocate moved before the Bar Council Of Tamil Nadu Bar Council Building, High Court Campus, Chennai - 600104. Those who have any valid objections may notify the same to the Bar Council Within 10 days.

SHAHILA.J

## 13-வது மகளிர் உலகக்கோப்பை:
# இந்தியா-தெ.ஆப்பிரிக்கா அணிகள் இன்று இறுதி போட்டியில் மோதல்

**மும்பை, நவ. 02-**

13-வது மகளிர் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு நவிமும்பை மைதானத்தில் தங்களது முதலாவது உலகக் கோப்பைக்காக இந்தியா-தென் ஆப்பிரிக்க அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன. உலகக் கோப்பை இறுதி ஆட்டத்தில் இந்திய மகளிரணி வெற்றி பெற்றால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் மிகப்பெரிய பரிசுத் தொகை வழங்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




**2-வது அரையிறுதியில்...**

மகளிருக்கான 13-வது உலகக் கோப்பைத் தொடர் இந்தியா மற்றும் இலங்கையின் பல்வேறு நகரங்களில் நடைபெற்றுவந்தது. தற்போது இந்தத் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. முதலாவது அரையிறுதியில் இங்கிலாந்தை வீழ்த்திய தென்னாப்பிரிக்க அணியும், இரண்டாவது அரையிறுதியில் ஆஸ்திரேலிய அணியை வீழ்த்திய இந்திய அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

**வெற்றி வாய்ப்பு...**

இதுவரையில் கோப்பையை வெல்லாத இவ்விரு அணிகளும் மோதும் இறுதிப்போட்டி இன்று நவி மும்பையில் டி.ஒய். பாட்டீல் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இரண்டாவது அரையிறுதியில் பலம் பொருந்திய ஆஸ்திரேலிய அணி நிர்ணயித்த 339 ரன்கள் இலக்கை விரட்டிப் பிடித்த இந்திய அணி, அதே மைதானத்தில் தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்வதால் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாகவே கருதப்படுகிறது.

**பி.சி.சி.ஐ. ஆலோசனை....**

இந்த நிலையில், இறுதிப்போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றால் மிகப்பெரிய பரிசுத் தொகையை வழங்க பிசிசிஐயின் உயரதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்தாண்டு முன்னாள் பி.சி.சி.ஐ. செயலரும் தற்போதைய ஐ.சி.சி. தலைவருமான ஜெய் ஷா பரிந்துரையின் படி, ஆடவர் அணிக்கு வழங்கப்பட்டும் அதே ஊதியம் மகளிர் அணிக்கும் வழங்கப்படும் பி.சி.சி.ஐ. தெரிவித்திருந்தது.

**ரூ. 125 கோடி வழங்க...**

இதேபோன்று டி20 உலகக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு வழங்கப்பட்டது போலவே சுமார் ரூ. 125 கோடி வழங்க முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால், போட்டியின் முடிவுகளுக்கு முன்னதாக பரிசு குறித்த அதிகாரபூர்வ தகவலை வெளியிடுவது நல்லதல்ல என்று பி.சி.சி.ஐ.-யின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**தலா ரூ. 50 லட்சம்...**

2017 ஆம் ஆண்டு லண்டன் லார்ட்ஸ் திடலில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான இறுதிப்போட்டியில் இந்திய அணி நூலிழையில் 9 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. அப்போது இந்திய அணியின் உள்ள வீராங்கனைகளுக்கு தலா ரூ. 50 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. தலைமைப் பயிற்சியாளர் துஷார் அரோத் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் சிறப்பான வெகுமதிகள் வழங்கப்பட்டன.

அதேபோன்று இந்திய அணி கோப்பையை வெல்லும் பட்சத்தில் பரிசுத் தொகை 10 மடங்குக்கு மேல் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கோப்பையுடன் போட்டோஷூட்

இறுதிப்போட்டிக்கு முன் இரு அணி கேப்டன்களும் போட்டோஷூட் நடத்துவது வழக்கமான ஒன்றாகும். அந்த வகையில் இன்று நடக்கவுள்ள இறுதிப்போட்டிக்கு முன்னதாக இந்திய மகளிர் அணி கேப்டனும் தென் ஆப்பிரிக்கா மகளிர் அணி கேப்டனும் கோப்பையுடன் போட்டோஷூட் எடுத்துக் கொண்டனர். இது தொடர்பான புகைப்படங்களை ஐ.சி.சி. தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளது. இந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.

# சட்டப்பேரவையில் அ.தி.மு.க. அளிக்கும் ஆவணங்கள் அடிப்படையில் நடவடிக்கை
## சபாநாயகர் அப்பாவு பேட்டி

**நெல்லை, நவ. 02-**

அ.தி.மு.க. அளிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் கல்லிடைகுறிச்சி பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட புறவழிச்சாலையை திறந்து வைத்த பின்னர் சபாநாயகர் அப்பாவு நிருபர்களிடம் கூறியதாவது:-

அ.தி.மு.க.வில் இருந்து சட்டமன்ற உறுப்பினர் செங்கோட்டையன் நீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக எந்த கடிதமும் அ.தி.மு.க சார்பில் சட்டமன்ற பேரவைக்கு கொடுக்கப்படவில்லை. அவ்வாறு கடிதம் அளிக்கும் பட்சத்தில் மனு மீது பரிசீலனை நடத்தப்படும். அ.தி.மு.க. அளிக்கும் ஆவணத்தின் அடிப்படையில் ஆய்வு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பிரதமர் உயர் பதவியில் இருந்து கொண்டு தமிழகம் குறித்து இந்த வார்த்தைகளை பயன்படுத்தி இருக்க வேண்டாம். பா.ஜ.க. கூட்டணியில் உள்ள நிதிஷ் குமார் செய்யும் துன்பத்தால் தான் அங்கிருந்து புலம்பெயர்ந்து அங்கு உள்ளவர்கள் தமிழகம் வந்துள்ளனர். தமிழகத்தில் வடமாநிலத்தவர்கள் துன்பமாக இல்லை. இன்பமாக இருக்கின்றனர்.

வட மாநிலத்தில் இருந்து தமிழகத்தில் வசிப்பவர்களும் இலவச பஸ் பயணம், படிப்பில் உதவித்தொகை உள்ளிட்ட தமிழக அரசின் திட்டங்களால் பயன்பெற்று வருகின்றனர். பாபநாசம், மணிமுத்தாறு அணையை இணைப்பதற்கான ஆய்வு நடத்தி திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் வனத்துறை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் சில சிக்கல்கள் இருக்கிறது. எனினும் முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன் அந்த சிக்கல்களை தீர்த்து அணைகளை இணைக்க நடவடிக்கை எடுத்து விடுவார்.

நகராட்சி நிர்வாகத்துறையில் 2,538 பணி இடங்களை நேர்மையாக வெளிப்படைத் தன்மையோடு அண்ணா பல்கலைக்கழக உதவியுடன் அமைச்சர் நேரு நியமனம் செய்துள்ளார். பணி நியமனத்தில் எந்த தவறும் நடைபெறவில்லை. அமலாக்கத்துறை தமிழக டி.ஜி.பி.க்கு பணி நியமனத்தில் ஊழல் நடந்திருப்பதாக விசாரணை நடத்த கடிதம் அனுப்பி உள்ளது. இந்த கடிதம் உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது. இது நீதிமன்ற அவமதிப்பு ஆகும். உறுதிப்படுத்தப்படாத ஆவணங்கள் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அல்லது விசாரணை ஆகியவையை அனுமதிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மணல் ஊழல், டாஸ்மாக் ஊழல் என உறுதிப்படுத்தப்படாத தகவல்களை வைத்து தேர்தல் நேரத்தில் தமிழக அரசுக்கு நெருக்கடி கொடுக்கலாம் என்ற நோக்கத்தில் இது போன்று அமலாக்கத்துறை செயல்பட்டு வருகிறது. தமிழக கவர்னர் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய பாதி மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளார். மீதி மசோதா அவரிடமே கிடப்பில் உள்ளது என்றார்.

# ரூ.18.90 கோடி மதிப்பிலான 87 புதிய ஆம்புலன்ஸ் சேவை
## முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்

**சென்னை, நவ. 02-**

ரூ.18.90 கோடி மதிப்பிலான 87 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையினை கொடியசைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (1.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 18 கோடியே 90 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையானது 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள் கலைஞரால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசானது என்ற தனியார் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையை வழங்கி வருகிறது. இச்சேவை 24x7 மணி நேரம் என்ற சேவையின் அடிப்படையில், பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பொது மக்கள் அவசரகால மருத்துவ தேவைக்கு “108“ என்ற கட்டணமில்லா இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பயன் பெறுகின்றனர்.

அவசரகால நெருக்கடியின் போது தேவையான மருத்துவ உதவியை எளிதாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் வழங்க, தற்போது 1,353 எண்ணிக்கையிலான ஆம்புலன்ஸ் வாகனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 977 - அடிப்படை வசதி கொண்ட ஆம்புலன்ஸ் வாகனங்ககள், 307 - மேம்படுத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்ககள், 65 - பச்சிளங்குழந்தைகளுக்கான வாகனங்கள் உள்ளிட்ட ஊர்திகள் அடங்கும்.

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவை மூலம் கருவுற்ற தாய்மார்கள், சாலை விபத்துகளில் காயமுற்றோர், இதர அவசரகால மருத்துவ தேவைகள் என மொத்தம் 85,98,054 மருத்துவ பயனாளிகள் பயன்பெற்று உள்ளனர். இவைத்தவிர, 41 இரு சக்கர வாகன அவசரகால ஊர்திகள் மூலம் 1,61,688 மருத்துவ பயனாளிகளும், பச்சிளங்குழந்தைகளுக்கான சேவை மூலம் 95,119 மருத்துவ பயனாளிகளும், பழங்குடியினர் பகுதிகளில் வசிக்கும் 4,30,697 மருத்துவ பயனாளிகளும் பயன் பெற்றுள்ளார்கள்.

ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையை மேலும் செம்மையாக செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் 18 கோடியே 90 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையினை நேற்று தமிழ்நாடு முதல்வர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில்
# தோட்டக்கலைப்பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, நவ. 02-**

சென்னை கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் தோட்டக்கலை பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

சென்னை, கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில் நீர்நிலைகளின் கரைகள் சீரமைக்கும் பணி உள்ளிட்ட தோட்டக்கலைப் பணிகளை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான சென்னை, கிண்டியில் அமைந்துள்ள நிலத்தில் சுற்றுச்சூழல் பூங்கா மற்றும் அது தொடர்பான பணிகளை அமைப்பதற்காக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் 20.09.2024 நாளிட்ட அரசாணையின்படி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு 118 ஏக்கர் நிலம் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலத்தில், சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசால் அறிவிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதியில் மழைநீரை சேகரிக்கும் வகையிலும், சென்னையின் மையப்பகுதியை பெரும் வெள்ளத்தில் இருந்து பாதுகாக்கும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நான்கு குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தோட்டக்கலைத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட சென்னை கிண்டியில் உள்ள இந்நிலத்தில், பல்வேறு இயற்கை சார்ந்த அனுபவத்தினை அளிக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

இச்சிறப்புமிக்க சுற்றுச்சூழல் பூங்கா தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் அமைக்கப்பட உள்ள நிலையில் இன்றைய தினம் தமிழ்நாடு முதல்வர் அங்கு அமைந்துள்ள நீர்நிலைகளின் கரைகளை வலுப்படுத்துதல், மரக்கன்றுகளை நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் அமைத்தல் ஆகிய பணிகளை தொடங்கி வைத்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொங்கல் பண்டிகைக்கு வேட்டி, சேலைகள் எப்போது வழங்கப்படும்?
## அமைச்சர் காந்தி தகவல்

**சென்னை, நவ. 02-**

பொங்கல் பண்டிகைக்கு வேட்டி, சேலைகள் எப்போது வழங்கப்படும்? என்று அமைச்சர் காந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் 30-க்கும் மேற்பட்ட பட்டுப்புடவை உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வரும் நிலையில் அவற்றில் முக்கியமான ஒன்றான முருகன் கூட்டுறவு சங்கம் அதன் விற்பனை நிலையத்தை எண்ணைக்கார தெருவில் உள்ள சொந்த இடத்தில் புதுப்பொலிவுடன் புனரமைத்துள்ளது. இந்த விற்பனை நிலையத்தை அமைச்சர் காந்தி திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் எம்.பி. செல்வம் மற்றும் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., முருகன் பட்டு கூட்டுறவு சங்க தலைவர் முத்துச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து அமைச்சர் காந்தி நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தி.மு.க. ஆட்சியில் கைத்தறி நெசவாளர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பொங்கலுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி, சேலைகள் மிகவும் தரமாக இருப்பதால் அனைவரும் அணிந்து மகிழ்கிறார்கள். மேலும், இந்த ஆண்டுக்கான பொங்கல் வேட்டி, சேலைகள் நவம்பர் 15-ந் தேதி முதல் வினியோகிக்கப்பட உள்ளது. தங்கம் மற்றும் வெள்ளி விலை உயர்வதால், பட்டுச் சேலைகளின் விலையும் உயர்ந்துள்ளது. எனவே, புடவைகளில் சேர்க்கப்படும் ஜரிகையில் தங்கம் மற்றும் வெள்ளியைக் குறைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மழை காரணமாக இதுவரை நெசவாளர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு இல்லை. தி.மு.க. ஆட்சியில் நெசவுத் தொழிலாளர்களின் கூலி உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு ரூ.800 கூலி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது நெசவாளர்களுக்கு ரூ.800 முதல் ரூ.1500 வரை கூலி கிடைக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அ.தி.மு.க. ஆட்சியில் பத்தாண்டுகளில் 9 ஆண்டுகள் நஷ்டத்தில் இயங்கிய நிலையில், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுமுதல் ஆண்டிலேயே ரூ.9 கோடி லாபம் ஈட்டியது, 58 சொசைட்டிகள் நவீனமயமாக்கப்பட்டு வியாபாரம் அதிகரித்து கூட்டுறவு சங்கங்கள் லாபத்தில் இயங்கத் தொடங்கி உள்ளது. இவ்வாறு அமைச்சர் காந்தி கூறினார்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களாக பதவி உயர்வு பெற்ற மருத்துவர் மு.வீரப்பன், சி.முத்துகுமரன், பி.எஸ்.லீலா அலெக்ஸ், ச.கவிதா, தி ரா.ரேவதி ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

# மருத்துவமனையில் இருந்து ஷ்ரேயாஸ் டிஸ்சார்ஜ்

**சிட்னி, நவ. 02-**

ஷ்ரேயாஸ் அய்யர் தற்போது மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார்.

**விலா பகுதியில்...**

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடந்த 3-வது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தின் போது ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி (24 ரன்) அடித்த பந்தை இந்திய அணியின் துணை கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் பின்னோக்கி ஓடிச் சென்று பாய்ந்து அருமையாக கேட்ச் செய்தார். அப்போது மைதானத்தில் விழுந்ததில் அவரது இடது விலாப்பகுதி பலமாக இடித்தது. வலியால் அவதிப்பட்ட அவர் உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேறினார்.




**‘ஸ்கேன்’ பரிசோதனை...**

அதன் பிறகு பீல்டிங் செய்ய வரவில்லை. அவர் இடது கீழ் விலாஎலும்பு பகுதியில் காயமடைந்திருப்பதாகவும், அதற்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் கிரிக்கெட் வாரியம் தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. மேலும் சில ‘ஸ்கேன்’ பரிசோதனை மேற்கொண்ட போது, விலா எலும்பையும் தாண்டி மண்ணீரலில் கீறல் ஏற்பட்டு, அதனால் ரத்தக்கசிவு உருவாகி இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து அணி டாக்டரின் அறிவுறுத்தலின் பேரில் சிட்னியில் உள்ள ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பிரிவில் (ஐ.சி.யூ.) ஸ்ரேயாஸ் ஐயர் அனுமதிக்கப்பட்டார்.

**உடல்நிலை சீராக...**

அங்கு அவருக்கு சிறப்பு மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர். உடனடியாக ரத்தக்கசிவை தடுப்பதற்குரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. ஷ்ரேயாஸ் அய்யருக்கு தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நிலையில், ஷ்ரேயாஸ் அய்யர் தற்போது மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார். ஷ்ரேயாஸ் அய்யர் உடல்நிலை சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் .

## 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்:
# இங்கிலாந்தை ஒயிட்வாஷ் செய்தது நியூசிலாந்து அணி

**வெலிங்டன், நவ. 02-**

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட டி20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடி யது. இதில் முதலில் நடைபெற்ற டி20 தொடரை இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையே ஒருநாள் தொடர் நடைபெற்றது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளிலும் வெற்றி பெற்ற நியூசிலாந்து தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது.

**222 ரன்களில் அவுட்...**

இந்நிலையில் நியூசிலாந்து - இங்கிலாந்து இடையிலான ஒரு நாள் தொடரின் 3-வது மற்றும் கடைசி போட்டி இன்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணியின் கேப்டன் மிட்செல் சான்ட்னர் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி நியூசிலாந்தை பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 40.2 ஓவர்களில் 222 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக ஜேமி ஓவர்டான் 68 ரன்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் டிக்னர் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**ஒயிட்வாஷ் செய்தது...**

இதனையடுத்து 223 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன கான்வே (34 ரன்கள்) மற்றும் ரச்சின் ரவீந்திரா (46 ரன்கள்) நல்ல அடித்தளம் அமைத்து கொடுத்தனர். அடுத்து வந்த வீரர்கள் சொதப்பினாலும் டேரில் மிட்செல் (44 ரன்கள்) மற்றும் மிட்செல் சாண்ட்னர் (27 ரன்கள்) பொறுப்பாக ஆடி அணிக்கு வெற்றியை தேடி கொடுத்தனர். முடிவில் நியூசிலாந்து 44.4 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 226 ரன்கள் அடித்து வெற்றி பெற்றது. அத்துடன் நியூசிலாந்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை முழுமையாக கைப்பற்றி இங்கிலாந்தை ஒயிட்வாஷ் செய்தது.

# ஆஸி.க்கு இந்தியா பதிலடி கொடுக்குமா? இன்று 3-வது டி-20 போட்டியில் மோதல்

**ஹோபர்ட், நவ. 02-**

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இன்று நடைபெறும் 3-வது டி20 போட்டியில் வெற்றிப்பெற்று இந்திய அணி பதிலடி கொடுக்குமா என்று ரசிகர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

**சுற்றுப்பயணம்...**

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 போட்டி கொண்ட ஒருநாள் தொடரை இந்தியா 1-2 என்ற கணக்கில் இழந்தது. 5 போட்டி கொண்ட 20 ஓவர் தொடரில் முதல் ஆட்டம் (கான்பெரா) மழையால் பாதியில் கைவிடப்பட்டது. மெல்போர்னில் நடைபெற்ற 2-வது போட்டியில் ஆஸ்திரேலியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் அந்த அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**சிறப்பான ஆட்டம்...**

இந்தியா-ஆஸ்திரேலியா மோதும் 3-வது 20 ஓவர் ஆட்டம் ஹோபர்ட்டில் இன்று (2-ந் தேதி) நடைபெறுகிறது. நேற்றைய போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு சூர்யகுமார் யாதவ் தலைமையிலான அணி பதிலடி கொடுத்து சமன் செய்யுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. அபிஷேக் சர்மா மட்டும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மற்ற பேட்ஸ்மேன்கள் அபாரமாக ஆடினால் மட்டுமே ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியும். அதே நேரத்தில் பந்துவீச்சு நேர்த்தியாக இருந்தது.

**அணியில் மாற்றம்....**

இன்றைய போட்டிக்கான அணியில் மாற்றம் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மிட்செல் மார்ஷ் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி இந்த ஆட்டத்திலும் வென்று 2-0 என்ற முன்னிலையை பெறும் வேட்கையில் உள்ளது. இந்திய நேரப்படி பிற்பகல் 1.45 மணிக்கு தொடங்கும் இந்த போட்டி ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல்களில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

# பெங்களூரு-எர்ணாகுளம் இடையே புதிய வந்தே பாரத் ரயில் இயக்கம்
## ஈரோடு, கோவை வழியாக - நேரம் அறிவிப்பு

**கொச்சி, நவ. 02-**

கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் இருந்து கர்நாடகா மாநிலம் பெங்களூருவிற்கு விரைவில் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் இயக்கப்படவுள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூரு - கேரள மாநிலம் எர்ணாகுளம் இடையே விரைவில் வந்தே பாரத் ரயில் இயக்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, வந்தே பாரத் ரயில் இயக்கப்படும் நேரத்தை ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளபடி, பெங்களூரு கே.ஆர்.எஸ். ரயில் நிலையத்தில் இருந்து காலை 5.10 மணிக்கு புறப்படும் வந்தே பாரத் ரயில் (வண்டி எண் 26651) அதே நாள் மதியம் 1.50 மணிக்கு எர்ணாகுளம் ஜங்ஷன் ரயில் நிலையத்தை வந்தடைகிறது.

மறுமார்க்கத்தில், எர்ணாகுளம் ஜங்ஷன் ரயில் நிலையத்தில் இருந்து மதியம் 2.20 மணிக்கு புறப்படும் வந்தே பாரத் ரயில் (26652) இரவு 11 மணிக்கு பெங்களூரு கே.ஆர்.எஸ். ரயில் நிலையத்தை சென்றடைகிறது. இந்த வந்தே பாரத் ரயில் கிருஷ்ணராஜபுரம், சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை, பாலக்காடு மற்றும் திருச்சூர் ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும்.

பெங்களூருவில் காலை 5.10 மணிக்கு புறப்படும் வந்தே பாரத் ரயில் கிருஷ்ணராஜபுரத்திற்கு காலை 5.23 மணிக்கும், சேலத்திற்கு காலை 8.13 மணிக்கும், ஈரோட்டிற்கு காலை 9 மணிக்கும், திருப்பூருக்கு காலை 9.45 மணிக்கும், கோவைக்கு காலை 10.33 மணிக்கும், பாலக்காட்டிற்கு காலை 11.28 மணிக்கும், திருச்சூருக்கு மதியம் 12.28 மணிக்கும் சென்றடைகிறது. ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் தலா 2 நிமிடங்கள் ரயில் நிற்கிறது.

மறுமார்க்கத்தில் எர்ணாகுளத்தில் இருந்து மதியம் 2.20 மணிக்கு புறப்படும் இந்த வந்தே பாரத் ரயில் திருச்சூருக்கு மதியம் 3.17 மணிக்கும், பாலக்காட்டிற்கு மாலை 4.35 மணிக்கும், கோவைக்கு மாலை 5.20 மணிக்கும், திருப்பூருக்கு மாலை 6.03 மணிக்கும், ஈரோட்டிற்கு இரவு 6.45 மணிக்கும், சேலத்திற்கு இரவு 7.18 மணிக்கும், கிருஷ்ணராஜபுரத்திற்கு இரவு 10.23 மணிக்கும் சென்றடைகிறது. திரும்பும்போதும் ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் தலா 2 நிமிடங்கள் நின்று செல்லும்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



மதுரை மேற்கு வட்டம், கோச்சடை அருகில் வைகை ஆற்றிலிருந்து பிரியும் அவனியாபுரம் கால்வாய் தூர்வாரப்படும் பணிகளை அமைச்சர் மூர்த்தி துவக்கி வைத்தார். உடன் கலெக்டர் பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா ஆகியோர் உள்ளனர்.

# வரும் 2026-ல் அனைத்து சூழ்ச்சிகளையும் எதிர்கொண்டு முதல்வராக எடப்பாடியார் தமிழக மக்களுக்கு நல்லாட்சி தருவார்

## அ.தி.மு.க. பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன் சூளுரை



**திண்டுக்கல், நவ. 02-**

அ.தி.மு.க.பொதுச் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் 54ம் ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் திண்டுக்கல் மேற்கு மாவட்ட சார்பில் பழனி பைபாஸ் ரோடு அருகே பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு திண்டுக்கல் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜசேகரன் தலைமை வகித்தார்.

மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சி.எஸ்.ராஜமோகன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணி, மோகன், வி.டி.ராஜன், சேசு, முரளிதரன், இக்பால் ஆகியோர் வரவேற்றனர். இந்த பொதுக் கூட்டத்தில் பொருளாளரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் கலந்து கொண்டு பேசியதாவது:-

விடியா தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்து நான்கரை ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆட்சி முடிவதற்கு இன்னும் ஆறு மாதமே உள்ளது. மீண்டும் கழகத்திற்கு வாக்களிக்க தமிழக மக்கள் தயாராக உள்ள நிலையில் ஸ்டாலின் 41 கோரிக்கைகளை நிறைவேற்றுகிறோம் எனக் கூறி உங்களிடம் ஸ்டாலின் என்ற திட்டத்தை அறிவித்துள்ளார். இந்த நான்கரை வருட கால ஆட்சியில் தி.மு.க. அரசு என்ன செய்தது?

அரிசி, பருப்பு, எண்ணெய், உள்ளிட்ட அத்தியாசிய உணவுப் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவில் உயர்வு, கட்டுமான பொருட்களான செங்கல், ஜல்லி, கம்பி, சிமெண்ட் விலை பன்மடங்காக உயர்வு என இந்த ஆட்சியில் விலைவாசி உயர்ந்தது தான் சாதனையாகும். மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் வழங்கியுள்ளதாக கூறுகிறார் ஸ்டாலின். ஆட்சிக்கு வந்த பின்னர் மூன்று வருடங்களாக மகளிர்க்கு கொடுத்த வாக்குறுதிப்படி உரிமை தொகையை வழங்கவில்லை. சட்டமன்றத்தில் எடப்பாடியார் கேள்வி மேல் கேள்வி எழுப்பியதால் தான் ஸ்டாலின் வழங்கினார். அதிலும் பாதி பெயருக்கு தான் வழங்கியுள்ளார் மீதி உள்ள பேருக்கு வழங்கவே இல்லை. அவர்கள் அனைவருக்கும் விரைவில் வழங்கப் போவதாக உதயநிதி ஸ்டாலின் கூறி மகளிருக்கு திருப்பதி நாமம் சாற்றி வருகின்றார்.

அதிலும் ஆயிரம் ரூபாய் கொடுப்பது போல் கொடுத்துவிட்டு ஐந்தாயிரம் வரை விலைவாசி உயர்வை ஏற்படுத்தி உள்ளனர் இந்த தி.மு.க. அரசு. மின் கட்டணம் பன்மடங்காக உயர்வு, சொத்து வரி, வீட்டு வரி, ஏன் குப்பைக்கு கூட வரியை போட்டுள்ளனர். டாஸ்மாக் கடைகளில் மதுபான பாட்டிலுக்கு கூடுதலாக ரூ10 அதிகமாக வைத்து விற்பனை செய்கின்றனர். இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான கோடி தி.மு.க.வின் தலைமைக்கு செல்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் போதை பொருள் நடமாட்டம் அதிகரித்து விட்டது. அதோடு இந்தியாவிலேயே அதிக கடன் சுமை உள்ள மாநிலமாக தமிழகத்தை மாற்றிவிட்டார் ஸ்டாலின். ஒவ்வொரு குடும்பத்தினரின் மீதும் 3.76 லட்சம் கடன் சுமை ஏற்பட்டு உள்ளது.

புரட்சித்தலைவி அம்மா மறைவிற்கு பின்னர் 18 எம்.எல்.ஏ.க்களை கொண்டு டி.டி.வி. தினகரனும் 11 எம்.எல்.ஏ.க்களை கொண்டு ஓ.பன்னீர்செல்வமும் ஆட்சியை கவிழ்க்க பார்த்தனர். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித்தலைவி அம்மாவின் ஆன்மா இருந்ததால் அதனை அனைத்தையும் எதிர் கொண்டு வெற்றி பெற்றவர் தான் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் தற்போது தி.மு.க. தான் அடுத்ததாக ஆட்சிக்கு வரும் என ஓ. பன்னீர்செல்வம் கூறி வருகிறார். அவர் ஏற்கனவே புரட்சித்தலைவி அம்மா போடி சட்டமன்ற தொகுதியில் நின்ற பொழுது அவரை எதிர்த்து நின்ற வென்னிறை ஆடை நிர்மலாவிற்கு ஏஜென்டாக தான் செயல்பட்டவர்.

கட்சியினால் தொண்டர்களால் வளர்ந்து விட்டு கழகத்திற்கு துரோகம் விளைவிக்கலாமா? அவர் போடாத நாடகமும் இல்லை ஆடாத ஆட்டமும் இல்லை. கழகத்தின் தொண்டனுக்கும் நிர்வாகிக்கும் கட்சியின் கரை வேட்டி கட்டி இருந்தால் தான் மரியாதை கிடைக்கும். கழகத்தின் மீது போடப்பட்ட அனைத்து வழக்குகளையும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித்தலைவி அம்மாவின் ஆசியால் அதனை எதிர்கொண்டு வெற்றி பெற்றவர் தான் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார்.

அ.தி.மு.க.வை அழிக்க வேண்டும் நினைத்தவர்கள் எல்லாம் சரண்டர் ஆகி விட்டனர். அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. அவர்கள் சிறைக்கு போகக்கூடிய நாள் வெகு தொலைவில் இல்லை. அரசியல் ஆண்மை இருந்தால் அவர்களால் தனித்து கட்சியை தொடங்க முடியுமா? எண்ணற்ற துரோகங்களையும் எதிரிகளையும் சந்தித்து வெற்றி வாகையை கழகம் சூடியுள்ளது. அதேபோல 2026-லும் அனைத்து சூழ்ச்சிகளையும் எதிர்கொண்டு முதல்வராக எடப்பாடியார் அமர்ந்து தமிழக மக்களுக்கு நல்லாட்சி தருவதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித்தலைவி அம்மாவின் ஆசியால் 2026ல் கழகத்தின் பொதுச் செயலாளர் எடப்பாடியார் தலைமையில் மலர்வதற்கு கழக நிர்வாகிகள் தொண்டர்கள் திறம்பட செயலாற்ற வேண்டும். மக்கள் தயாராகிவிட்டனர் கழக ஆட்சிக்கு வாக்களிப்பதற்கு. எனவே மீண்டும் எழுவோம் கழக ஆட்சியை கொண்டு வருவோம் என இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அமைப்பு செயலாளர் வி.மருராஜ், மாநில இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி. பி.பரமசிவம், தலைமை பேச்சாளர்கள் பாவலர் ராமச்சந்திரன், பாரிஸ் ராஜா, எம்.ஜி.ஆர். முத்து, முத்து அவினாஷ் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தென்னம்பட்டி பழனிச்சாமி, பி.கே.டி.நடராஜன், மாவட்ட பொருளாளர் எஸ்.ஏ. பழனிவேல், திண்டுக்கல் வடக்கு ஒன்றிய செயலாளர் தர்மராஜ், குஜிலியம்பாறை ஒன்றிய செயலாளர் மலர்வண்ணன், வேடசந்தூர் ஒன்றிய செயலாளர் ஜான் போஸ், பேரூர் செயலாளர் பாபு சேட், பாளையம் பேரூர் செயலாளர் மணிமாறன், மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் சிவபாரதி, மாவட்ட மீனவர் அணி செயலாளர் மனோகரன், மாவட்ட தொழிற்சங்க செயலாளர் ஜெயராமன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயபால், மாவட்ட டாஸ்மாக் செயலாளர் சசிகுமார், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் பிரபு ராம், மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் ராஜசேகரன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் மீனாட்சிசுந்தரம், மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் ரவிக்குமார், மாவட்ட இணை செயலாளர் திராவிடராணி, மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் முத்துசாமி, முன்னாள் அரசு வழக்கறிஞர்கள் பழனிச்சாமி, மனோகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கார்த்தி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் ஆர்.பி.ஆர். பிரபு, நவநீதன், முகமது அப்துல்லா, கருப்புசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# விருதுநகர் வத்திராயிருப்பு அருகே இணையவழி பட்டாக்களை பயனாளிகளுக்கு கலெக்டர் சுகபுத்ரா நேரில் சென்று வழங்கினார்



**விருதுநகர், நவ. 02-**

வத்திராயிருப்பு அருகே, கோட்டையூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் சார்பில், ஆதிதிராவிடர் நத்தம் இலவச வீட்டுமனை ஒப்படை ஆணைகள் பெற்று இதுவரை இணைய வழி பட்டா கிடைக்கப்பெறாத 60 குடும்பங்களுக்கு கலெக்டர் சுகபுத்ரா இணையவழி பட்டாக்களை பயனாளிகளுக்கு நேரில் சென்று வழங்கினார்.

இலவச மனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு இல்லாமல் ஆட்சேபனை இல்லாத புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வாழ்ந்து வரும் ஏழை, எளிய குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்கப்படுகிறது. மேலும், ஆக்கிரப்பு நிலத்திற்கு உண்டான பட்டாவையும் அரசே இலவசமாக வழங்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாக வத்திராயிருப்பு வட்டம் கோட்டையூர் ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்த 60 குடும்பங்கள் கடந்த 24 வருடங்களுக்கு முன்பு ஆதிதிராவிடர் நத்தம் இலவச வீட்டு மனை ஒப்படை ஆணைகள் பெற்று,

இதுவரை இந்த இடங்களுக்கான இணைய வழி பட்டா இல்லை என்பதால், அதற்கான பட்டாக்களை வழங்கிட வேண்டுமென கோரிக்கை வைத்தனர்.

அதனடிப்படையில், அப்பகுதி மக்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து 60 குடும்பங்களுக்கு இணைய வழி பட்டாக்களை கலெக்டர்சுகபுத்ரா நேரில் சென்று வழங்கினார்.

எங்களுக்கு இந்த இடத்திற்கான ஒப்படை ஆணைகள் 24 வருடங்களுக்கு முன்பாக வழங்கப்பட்டிருந்தாலும், அரசு பட்டா இல்லாமல் சிரமப்பட்டு இருந்தோம். தற்போது எங்கள் அனைவருக்கும் இணைய வழியிலான இலவச வீட்டு மனை பட்டாக்களை, கலெக்டர் அவர்களே எங்களைத் தேடி வந்து வழங்கியது மிகவும் நெகிழ்ச்சியாக உள்ளது.

எனவும், இலவச பட்டா வழங்கியதன் மூலம் எங்களுக்கு இந்த இடத்திற்கான அரசு அங்கீகாரம் கொடுத்துள்ளதால், நாங்கள் எந்த வித தயக்கமின்றி எங்களுக்கான இடங்களில் வீடுகள் கட்டி குடியேற முடியும். எங்களுடைய பலவருட பயத்தையும், பதட்டத்தையும் எங்களுக்கு இந்த பட்டாக்கள் வழங்கியதன் மூலம் தமிழ்நாடு அரசு மகிழ்ச்சியாக மாற்றியிருக்கிறது. அதற்காக தமிழ்நாடு அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் இப்பகுதி மக்கள் நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பாலாஜி, வட்டாட்சியர் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# திருமங்கலத்தில் குரங்கை பிடிக்க பொதுமக்கள் கோரிக்கை

**திருமங்கலம், நவ. 02-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் வீடு புகுந்து அட்டகாசம் செய்து வரும் ஜோடி குரங்கினை கூண்டு வைத்து பிடித்திட வேண்டும் என தமிழக வனத்துறை யினருக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருமங்கலம் பானு தியேட்டர் பின்பிறம் உள்ள ரோஜா தோட்டம்ரூபவ்செங்குளம் கிழக்கு தெருரூபவ்சோழவந்தான் ரோடு பகுதிகளை மையமாகக் கொண்ட இடத்தில் அமைந்துள்ள 100அடி உயர செல்போன் டவர் பகுதியில் கடந்த சில நாட்களாக ஜோடி குரங்கு தஞ்சமடைந்துள்ளது.ஆரம்பத்தில் இந்த குரங்குகளை பரிதாபத்துடன் பார்த்து உணவளித்த மக்கள் தற்போது அவற்றின் அட்டகாசம் தாங்கிட முடியாமல் தவித்து வருகின்றனர்.இரவு நேரங்களில் செல்போன் டவரின் உச்சிக்கு சென்றுவிடும் இந்த குரங்குகள் பகல் நேரங்களில் அப்பகுதியிலுள்ள வீடுகளுக்குள் நுழைந்து உணவு பொருட்களை தின்றும்ரூபவ்விலை உயர்ந்த பொருட்களை சேதப்படுத்தியும் வருகிறது.

அதே போல் அப்பகுதியிலுள்ள கடைகள் மற்றும் உணவகங்களில் நுழைந்து உணவுப்பொருட்களை சூறையாடிச் சென்று விடுகின்றன.

மேலும் வீதிகளில் வாகனங்களில் செல்வோரை மிரட்டி அவர்கள் கொண்டு சென்றிடும் பொருட்களை வழிப்பறி செய்வது இந்த ஜோடி குரங்கிற்கு கைவந்த கலையாக உள்ளது.ஆனால் இதுவரை இந்த குரங்கு யாரையும் கடித்து காயப்படுத்திடாத நிலையில் அதன் அட்டகாசங்கள் நாள்தோறும் அதிகரித்து வருவதால் பொதுமக்களும், கடைக்காரர்களும் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். எனவே ஜோடி குரங்கினால் ஏற்படும் இழப்புகளால் பாதிக்கப்படும் பொதுமக்கள்ரூபவ் இதற்கு முடிவு கட்டிடும் வகையில் வனத்துறையினர் உடனடி நடவடிக்கை எடுத்து கூண்டு வைத்து இந்த ஜோடி குரங்கினை பிடித்து காட்டு பகுதியில் விடவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அலங்காநல்லூர் ஒன்றிய37 ஊராட்சிகளில் உள்ளாட்சி தினத்தையொட்டி சிறப்பு கிராம கூட்டம்



**அலங்காநல்லூர், நவ. 02-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றிய ஊராட்சிகளில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம கூட்டம் நடந்தது அச்சம்பட்டி ஊராட்சியில் ஊராட்சிசெயலாளர் முருகேஸ்வரி தலைமையில் பற்றாளர் ஞானசௌந்தரி கலந்துகொண்டு உரையாற்றினார் அதேபோல் மேட்டுப்பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் தாய்மொழி தலைமையில் பற்றாளர் எஇ அமுதா கலந்து கொண்டார்.

பெரிய ஊர்சேரியில். ஊராட்சி செயலாளர் முத்துக்குமார் ஏற்பாட்டில் பற்றாளர் ரகுபதி கலந்து கொண்டார்.

அதேபோல் முடுவார்பட்டி ஊராட்சியில் நடந்த சிறப்பு கிராம கூட்டத்தில் பற்றாளர் மீனாட்சி ஊரக நல அலுவலர் ஊராட்சி செயலாளர் செல்வமூர்த்தி ஏற்பாட்டில் நடந்தது.

அதேபோல் மாணிக்கம்பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் பெருச்சி பற்றாளர் மலர்மன்னன் சுகாதார அலுவலகம் தவமணி கலந்து கொண்டார் இதில் இந்த ஊராட்சியில் பொம்மிநாயக்கன்பட்டியில் புகையில்லா கிராமமாக இருக்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றினர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அதேபோல் சத்திர வெள்ளாளபட்டி ஊராட்சியில் பற்றாளர் ரகுபதி ஊராட்சி செயலாளர் பூமிநாதன் முன்னிலையில் நடந்தது.

இதுபோல் ராஜாக்கள் பட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் முத்துக்குமார் பற்றாளர் அலமேலுமங்கை கலந்து கொண்னர் கல்லணை ஊராட்சியில் பற்றாளர் காளீஸ்வரகுமார் ஊராட்சி செயலாளர் ராஜாங்கம் ஏற்பாட்டில் ஊராட்சியில் அடிப்படை வசதிகள் மின்சாரம் கழிவு நீர் வாய்க்கால் 100 நாள் வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் என்னென்ன வேலைகள் செய்வது என்ற தீர்மானங்கள் நிறைவேற்றினர் இதுபோல் அலங்காநல்லூர் ஒன்றிய 37 கிராம பஞ்சாயத்துகளிலும் கிராம சபை கூட்டம் நடந்தது

# தேவர் சிலைக்கு அணிவிக்கப்பட்ட தங்க கவசம் மீண்டும் வங்கியில் ஒப்படைத்தனர் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், நினைவிட பொறுப்பாளர் காந்தி மீனாள்



**மதுரை, நவ 02-**

அ.தி.மு.க.வில் செங்கோட்டையன் ராஜாவாக இருந்தார்.ஆனால், துரோகிகளிடம் சேர்ந்து செங்கோட்டையன் கூஜா தூக்கச் சென்றுள்ளார் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி. சீனிவாசன் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் உள்ள தேவர் சிலைக்காக மறைந்த முதல்வர் ஜெயலலிதாவால் வழங்கப்பட்ட தங்க கவசத்தை குருபூஜை விழாவிற்காக மதுரை வங்கி பெட்டகத்தில் இருந்து எடுத்து செல்லப்பட்டது.விழா நிறைவுற்றதை எடுத்து செல்லப்பட்ட தங்க கவசத்தை அ.தி.மு.க. பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன் மற்றும் நினைவிட பொறுப்பாளர் காந்தி மீனாள் ஆகியோர் வங்கியிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா, மருத்துவரணி இணைச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சரவணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.சரவணன், கே.தமிழரசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் நிருபர்களிடம் கூறியதாவது-தெய்வத்திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 118-வது ஜெயந்தி விழாவும், 63-வது குருபூஜையை முன்னிட்டு கடந்த 24 ஆம் தேதி வங்கியில் இருந்து தங்க கவசத்தை எடுத்து பசும்பொன் முத்துராமலிங்க தேவருக்கு அறிவிக்கப்பட்டது. தற்பொழுது வங்கியில் மீண்டும் தங்க கவசத்தை ஒப்படைத்துள்ளோம். தி.மு.க.வின் பீ டீம் யார் என்பதை எடப்பாடியார் ஆதாரப்பூர்வமாக தெரிவித்துள்ளார். அ.தி.மு.க.வுக்கு எதிராக செங்கோட்டையன் வழக்கு தொடரட்டும். பார்த்துக் கொள்ளலாம். வழக்கு தொடர்வதற்கு எல்லாருக்கும் உரிமை உள்ளது. அம்மாவால் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட துரோகிதான் டி.டி.வி. தினகரன், அம்மாவால் நீக்கப்பட்ட டி.டி.வி. தினகரன் சொல்வதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்ல முடியாது. அவரிடம் ஆளே இல்லை. அதனால்தான் உங்களைப் போன்ற ஊடகங்களை வைத்து கேள்விகளை எழுப்பி வருகிறார். எடப்பாடியாருக்கு முன்பாக பிறந்துள்ளவர் எனும் ஒரு தகுதியை மட்டும் செங்கோட்டையன் பெற்றுள்ளார். அந்த தகுதியைத் தவிர அனைத்து தகுதிகளையும் எடப்பாடியார் பெற்றுள்ளார்.

இறைவன் அருளால் முதலமைச்சராகவும், பொதுச் செயலாளராகவும் எடப்பாடியார் இருந்துள்ளார்.செங்கோட்டையன் முதல்வர் வாய்ப்பு 2 முறை விட்டுக் கொடுத்துவிட்டு என்று கூறுகிறார். வாய்ப்பு வந்தால் கொடுத்து இருப்பாரா? வாய்ப்பு வந்தால் ஏன் விட்டுக் கொடுத்தார்?, வாய்ப்பு வந்தால் யாராவது முதல்வர் பதவியை விட்டுக் கொடுப்பார்களா. எடப்பாடியார் முலமைச்சராக பொறுப்பேற்க வேண்டும் என்பது இறைவனின் தீர்ப்பு. எடப்பாடியார் முதலமைச்சராக வருவதற்கு யாரும் பின்புலத்தில் இல்லை. அம்மா இருக்கும்போது முதலமைச்சராக வரவேண்டும் என செங்கோட்டையன் ஆசைப்பட்டதை அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆதாரத்துடன் அம்மாவிடம் தெரிவித்ததால் செங்கோட்டையனின் அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது. சசிகலா, செங்கோட்டையன், ஓ.பி.எஸ்., டி.டி.வி. தினகரன் அ.தி.மு.க. சட்டத்தின் படியும், பொதுக்குழு முடிவின்படி நீக்கப்பட்டவர்கள் அவர்களை அ.தி.மு.க.வில் மீண்டும் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. சசிகலா போல நானும் சொல்கிறேன். வெயிட் அண்ட் சி இவர்களின் வாழ்க்கை 3 மாதங்களில் என்ன ஆகப்போகிறது என பொறுத்திருந்து பாருங்கள்.அ.தி.மு.க.வில் செங்கோட்டையன் ராஜாவாக இருந்தார்.ஆனால், துரோகிகளிடம் சேர்ந்து செங்கோட்டையன் கூஜா தூக்கச் சென்றுள்ளார்.பதவியில் இருந்தால் மட்டுமே மரியாதை, பதவியை விட்டு செல்கிறேன்.

என்றால் யாரும் கவலைப்பட மாட்டார்கள். அண்ணே எப்ப போவான் திண்ணை எப்போ காலியாகும் என காத்திருப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி முகாம்



**பரமக்குடி, நவ. 02-**

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், பரமக்குடி மற்றும் திருவாடானை சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் முதுகுளத்தூர், பரமக்குடி தொகுதிக்குட்பட்ட பயிற்சிக் கூட்டங்களுக்கு சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து தெரிவிக்கையில்,இந்திய தேர்தல் ஆணையம் வழிகாட்டுதலின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான பணிகள் நடைபெற உள்ளது. இப்பணியில் ஈடுபட்டுள்ள வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் (பிஎல்ஓ) தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை சிறப்புடன் கையாண்டு வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான பணிகளை நல்ல முறையில் முடித்திட வேண்டும்.

பணிமேற்கொள்ளவுள்ள வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் கணக்கெடுப்பு படிவத்தை வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று வழங்கி, ஒப்புதல் பெற வேண்டும். அதேபோல் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சேகரிக்கும் பொழுதும் ஒப்புதல் தர வேண்டும். குறிப்பாக களப்பணியில் ஈடுபட்டுள்ள வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் கணக்கெடுப்பு வடிவத்தை வீடுகளுக்கே நேரடியாக சென்று வழங்கி, விடுபடாத வகையில் பணிகளை கவனமுடன் செயலாற்ற வேண்டும். கணக்கெடுப்பு படிவம் பூர்த்தி செய்து திரும்பப் பெறுவது தொடர்பான விவரங்களை பயிற்சி வகுப்பில் முழுமையாக தெரிந்து கொண்டு பணியில் சிறப்பாக செயலாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் ஞா.சரவண பெருமாள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ராஜா, வட்டாட்சியர் வரதன்,பரமசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்




உள்ளாட்சி தினத்தையொட்டி மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி ஒன்றியம்,மேலவளவு ஊராட்சியில் உள்ள அழகாபுரிபட்டியில் ஓவர்சீயர் மகாராஜா தலைமையில் கிராமசபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி செயலர் சுவேகம்,மற்றும் பொதுமக்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முருகேசபாண்டியனால் தொகுக்கப்பட்ட "கலைஞர் நாடகங்கள்" என்ற கலைஞர் கருணாநிதி எழுதிய நாடகங்களின் தொகுப்பு நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது நூல் தொகுப்பாளர் முருகேசபாண்டியன், அவரது துணைவியார் மற்றும் சந்தானம் ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.18 கோடியே 90 லட்சத்து 46 ஆயிரம் மதிப்பிலான 87 புதிய '108' அவசரகால ஊர்திகளின் சேவையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ் உள்ளனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வீட்டுவசதி, நகர்புற வளர்ச்சித்துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 36 நபர்களுக்கும், நகர் ஊரமைப்பு இயக்ககத்தில் அளவர்/உதவி வரைவாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 24 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.



சென்னை காரப்பாக்கத்தில் மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கட்டுமான பணிகள் நடைபெறும் பகுதியில் ஒக்கியம் மடுவு கால்வாயில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக கரைகள் அகலப்படுத்தப் பட்டுள்ளதையும், நீர் தடையின்றி செல்வதையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் மேயர் ஆர்.பிரியா, எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.

# கண்ணகி நகரில் உருவாகும் கபடி மைதானத்தை நேரில் ஆய்வு செய்த துணை முதல்வர் உதயநிதி

சென்னை, நவ. 02-

கண்ணகி நகரில் உள்ள மாநகராட்சி பூங்காவில் ரூ.40 லட்சம் மதிப்பில் உள்ளரங்க கபடி மைதானம் அமைக்கும் பணியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார்.

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் கபடி பிரிவில் இந்தியா சார்பில் விளையாடிய ஆடவர் மற்றும் மகளிர் அணியினர் தங்கம் வென்றன. இந்த இரு அணியிலும் தமிழகத்தைச் சேர்ந்த அபினேஷ் மற்றும் கார்த்திகா ஆகியோர் விளையாடி தங்கம் பெற பெரும் பங்கை வகித்தனர். தங்கம் வென்ற கையுடன் சென்னை வந்த இருவரையும், அந்த நொடியே நேரில் அழைத்து பாராட்டிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலா ரூ.25 லட்சம் ஊக்கத்தொகை வழங்கினார்.

சென்னை கண்ணகி நகரை சேர்ந்த கார்த்திகாவின் வெற்றியால் அப்பகுதி மக்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்நிலையில், கண்ணகி நகரில் உள்ள மாநகராட்சி பூங்காவில் ரூ.40 லட்சம் மதிப்பில் உள்ளரங்க கபடி மைதானம் அமைக்கும் பணியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கபடி வீராங்கனை கார்த்திகாவின் அபார சாதனையால் தமிழ்நாடு முழுவதும் தற்போது சென்னை கண்ணகி நகரின் புகழ் எதிரொலித்து வருகிறது. கண்ணகி நகரில் உள்ள மாநகராட்சி பூங்காவில் ரூ.40 லட்சம் மதிப்பில் உள்ளரங்க கபடி மைதானம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை நேரில் ஆய்வு செய்தோம். மழை, வெயில் குறித்து கவலையின்றி கபடி வீரர், வீராங்கனைகள் பயிற்சி பெற இந்த உள்ளரங்க மைதானம் அவர்களுக்கு பேருதவியாக இருக்கும். கார்த்திகா போன்ற இன்னும் பல வீராங்கனைகளை நிச்சயம் உருவாக்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

# 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்தின் வயது வரம்பை 65-ந்தாக தளர்த்தியது அரசு

சென்னை, நவ. 02-

வீட்டிற்கே சென்று ரேஷன் பொருட்கள் விநியோகிக்கும் 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்திற்கான வயது வரம்பை 70 வயதில் இருந்து 65 வயதாக தமிழக அரசு தளர்த்தியுள்ளது.

முதியோர்- மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தண்டையார்பேட்டையில் கடந்த ஆகஸ்டு 12ம் தேதி அன்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம், தமிழக அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை பொது மக்களின் வீடு தேடிச் சென்றடைய செய்யும் வகையில் மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேஷன் பொருட்களான அரிசி, சர்க்கரை உள்ளிட்ட பொருட்கள் அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் உள்ள 34,809 நியாயவிலைக் கடைகளை சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை கொண்ட 15 லட்சத்து 81 ஆயிரத்து 364 ரேசன் கார்ட்டில் உள்ள 20 லட்சத்து 42 ஆயிரத்து 657 பயனாளிகளும், 91 ஆயிரத்து 969 ரேசன் அட்டைகளில் உள்ள ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத்திறனாளிகளும் பயன் அடைகின்றனர். ஒவ்வொரு மாதமும் 2-வது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்நிலையில், வீட்டிற்கே சென்று ரேஷன் பொருட்கள் விநியோகிக்கும் 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்திற்கான வயது வரம்பை 70 வயதில் இருந்து 65 வயதாக தமிழக அரசு தளர்த்தியுள்ளது.



சேலத்தில் அ.தி.மு.க. நிர்வாகிகளுடன் செய்தியாளர்களை சந்தித்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க.வில் இருந்து செங்கோட்டையன் எம்.எல்.ஏ.வை நீக்கியது தொடர்பாக ஆதாரங்களுடன் விளக்கினார். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் செம்மலை உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# செங்கோட்டையன் நீக்கம் ஏன்? இ.பி.எஸ். பரபரப்பு விளக்கம்

சேலம், நவ. 02-

செங்கோட்டையன் கட்சியில் இருந்து ஏன் நீக்கப்பட்டார் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விளக்கமளித்துள்ளார். அப்போது அ.தி.மு.க. தலைமைக்கு எதிராக செயல்பட்டால் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோம் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

செங்கோட்டையன் கட்சியில் இருந்து ஏன் நீக்கப்பட்டார் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அவர் கூறியதாவது,

செங்கோட்டையன் தி.மு.க.வின் பி டீமாக செயல்பட்டார். கட்சி விழாவில் பங்கேற்காமல் புறக்கணித்த செங்கோட்டையன் ஜெயலலிதா படம் இடம்பெறவில்லை என தவறான கருத்தை கூறினார். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அதை விளக்கியபோது அவர் ஏற்கவில்லை. ஆனால், சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றில் செங்கோட்டையன் பங்கேற்றார். அதுதொடர்பான பேனர்களில் எம்.ஜி.ஆர்., மற்றும் ஜெயலலிதா படங்கள் இடம் பெறவில்லை. கருணாநிதி, மு.க.ஸ்டாலின் படங்கள் தான் இருந்துள்ளன. அப்போதே அவர் பி-டீம் வேலையை ஆரம்பித்துவிட்டார்.

செங்கோட்டையன் கடந்த 6 மாதமாக கட்சிக்கு எதிராக தான் இருந்தார். செங்கோட்டையன் குறிப்பிடுபவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள், பிரிந்து சென்றவர்கள் அல்ல. கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களுடன் இணைந்து செயல்பட்டதால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்சிக்கு துரோகம் செய்தால் இதுதான் நிலைமை.பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றி கட்சியை விட்டு நீக்கியவர்களோடு தொடர்பு வைத்திருந்தால், நீக்காமல் என்ன செய்வார்கள் ?.

அ.தி.மு.க. தலைமைக்கு எதிராக செயல்பட்டால் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோம்.அ.தி.மு.க.வைப் பற்றி பேச டிடிவி தினகரனுக்கு எந்த தகுதியும் இல்லை. தி.மு.க.வை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வர செங்கோட்டையன், டிடிவி தினகரன், ஓ.பன்னீர் செல்வம் திட்டமிட்டுள்ளனர்.

ஜெயலலிதாவால் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு அ.தி.மு.க. குறித்து பேச தகுதி இல்லை. சட்டப் பேரவையில் தி.மு.க.வை எதிர்த்து ஒரு வார்த்தை கூட செங்கோட்டையன் பேசியதில்லை. என தெரிவித்துள்ளார்.

# இ.பி.எஸ். தலைமையில் வரும் 5-ம் தேதி அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

சென்னை, நவ. 02-

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்திற்கு எடப்பாடி பழனிசாமி அழைப்பு விடுத்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நவம்பர் 5-ம் தேதி காலை 10.30 மணிக்கு அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளது.

மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# ரூ.1248.24 கோடி செலவில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

தரம் உயர்த்தப்பட்ட மயிலாடுதுறை – திருவாரூர் சாலையை முதல்வர் திறந்து வைத்தார்.

தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 197 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் 10 மீ அகல இருவழிச்சாலையாக (மாநில நெடுஞ்சாலை –66) (கி.மீ. 3/6-8/6) 5.0 கி.மீ நீளத்திற்கும் மற்றும் (கி.மீ 13/9-கி.மீ 23/8) 9.90 கி.மீ நீளத்திற்கும் தரம் உயர்த்தப்பட்ட கும்பகோணம் - மன்னார்குடி சாலை, திருவள்ளூர் மாவட்டத்தில் 111 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 7/0-18/4) 11.40 கி.மீ நீளத்திற்கு இரு வழிப்பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட கொரட்டூர் - தின்னனூர் - பெரியபாளையம் சாலை மற்றும் 82 கோடி ரூபாய் செலவில் (கி.மீ.7/0-16/2) 9.20 கி.மீ நீளத்திற்கு இரு வழிச்சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட திருவள்ளூர் - அரக்கோணம் சாலை, திருநெல்வேலி மாவட்டத்தில் 65 கோடியே 99 லட்சம் ரூபாய் செலவில் (கி.மீ 0/0-6/049) 6.049 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட அம்பாசமுத்திரம் புறவழிச் சாலையை முதல்வர் திறந்து வைத்தார்.

முதல்வர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரியலூர் மாவட்டத்தில் 60 கோடி ரூபாய் செலவில் (கி.மீ 6/8-14/8) 8.0 கி.மீ நீளத்திற்கும், 62 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 14/8-21/0) 6.20 கி.மீ நீளத்திற்கும் மற்றும் 63 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 21/0-27/6)6.60 கி.மீ நீளத்திற்கும் (மாநில நெடுஞ்சாலை-140) இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட விருத்தாசலம் - ஜெயங்கொண்டம் - மதனத்தூர் சாலையை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மதுரை மாவட்டத்தில் 41 கோடியே 89 லட்சம் ரூபாய் செலவில் திருப்பரங்குன்றம், மதுரை - திருமங்கலம் சாலைப்பகுதி (மாநில நெடுஞ்சாலை- நகர்பகுதி எண்.101); கி.மீ.2/550- 3/750-ல் வலதுபுறத்தில் உள்ள தென்கால் கண்மாய் கரைவழியாக 1.20 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட இருவழிச்சாலை, வேலூர் மாவட்டத்தில் 35 கோடியே 99 லட்சம் ரூபாய் செலவில் கூடநகரம் - அனங்காநல்லூர் சாலையில் கி.மீ 3/0-ல் ரெயில்வே கி.மீ. 160/2-4ல் உள்ள கடவு எண்.67-க்கு மாற்றாக மேலாலத்தூர் - வளத்தூர் ரெயில் நிலையங்களுக்கிடையே கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம், லட்சுமி அம்மாள்புரம் - நாவிதம்பட்டி சாலையில் கி.மீ 0/2-ல் ரெயில்வே கி.மீ. 168/12-14ல் உள்ள கடவு எண்.72-க்கு மாற்றாக மேல்பட்டி - வளத்தூர் ரெயில் நிலையங்களுக்கிடையே 35 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை முதல்வர் திறந்து வைத்தார். மொத்தம் 1,248 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 சாலைகள் மற்றும் இரு சாலை மேம்பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் ஆலாத்தூர் ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு நேற்று நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் உடனிருந்தார்.